

# திருக்கோயில்



ஏப்ரல்
2004

விலை
ரூ 7.00



மகாமக விழா 6-3-2004 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றபோது பல லட்சக்கணக்கான மக்கள் பக்திப் பரவசத்துடன் மகாமகக் குளத்தில் நீராடினர். மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகய்யா பிஎஸ்.சி. பிஎல்., இணை ஆணையாளர் (திருப்பணி) திருமிகு ப. தனபால் எம்.ஏ. பிஎல். ஆகியோரும் அறநிலையத்துறை அதிகாரிகளும் இம்மகத்தான மகாமக விழா சிறக்க தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.



# திருக்கோயில்




திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 7.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 75.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 1000.00 |

மாலை 46 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | தாரண - சித்திரை | ஏப்பிரல் 2004 | மணி 4



சிறப்பாசிரியர்

**திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.**
ஆணையாளர்

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி**

**"திருக்கோயில்" நிர்வாகக் குழுவினர்**

**திருமிகு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

**திருமிகு த. சுந்தரம்,** பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமிகு ஆ. குப்புசாமி,** பி.ஏ. பிஎல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திருமிகு கே.கே. இராஜா,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி


<u>முகப்பு</u>

**அருள்மிகு வையம் காக்கும் வைகுண்ட மூர்த்தி**

## பொருளடக்கம்


**தெய்வத்திருநாடும் அருளாளர்களும்**
- திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்

**திருமந்திர உபதேசம்**
- திருமந்திரச் செம்மல் திருமிகு
டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

**வையம் காக்கும் வைகுண்ட மூர்த்தி**
- திருமிகு வை. பழனிச்சாமி இ.ஆ.ப.(ஓய்வு)

**கந்தன் தமிழ்க் கண்ணி**
- கவிஞர் தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.

**தரிசிக்கலாம் வாரீர்! நவகிரகத் திருக்கோயில்கள்**
- இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

**வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்**
- முனைவர் த. அமிர்தலிங்கம்

**ஆலய தரிசனம் ஆன்ம லாபம் (பாடல் பெற்ற தலம்)**

**ஆனைக்கா அண்ணல்**
- ஜி. வெங்கடேசன் எம்.ஈ., எம்.ஐ.ஈ.,

**திருக்குடந்தை மகாமகம் 2004**
- திருமதி இந்திரா ஆரா அமுதன்




திருக்கோயில்
வாசகர்கள் அனைவருக்கும்
மனமார்ந்த
தமிழ்ப் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்.


உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:
உயர்திரு ஆணையாளர் அவர்கள்
***திருக்கோயில்***
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*
தொலைபேசி: *28334811, 28334812, 28334813*

# தெய்வத்திருநாடும் அருளாளர்களும்

- திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.
**அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**

(முன்தொடர்ச்சி)

சோழ வளநாட்டில், உறையூர் திருத்தலத்தில் கார்த்திகை மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் அவதாரம் செய்தவர் ''அமலனாதிபிரான்'' எனும் அற்புதநூல் நமக்கு அருளிச் செய்த திருப்பாணாழ்வார் பெருமான் ஆவர்.

பாணர் குலத்தில் வளர்ந்தவரான இவரைத் 'திருப் பாணாழ்வார்' என்றே கொண்டாடி மகிழ்கின்றது நம் வைணவ சமயம். தாம் வளர்ந்த குலம் சிறுமை உடையது என எண்ணியபடியால் இவர் திருவரங்கம் சென்று அரங்கனின் திவ்வியப் பேரழகைத் தரிசித்தல் வேண்டும் என்ற தம் பேரவாவை அடக்கிக் கொண்டு, ஒவ்வொருநாளும் காவிரியின் தென் கரையில் திரு முகத்துறைக்கு எதிரில் யாழும் கையுமாக நின்று கொண்டு அரங்கப் பெருமானின் திசைநோக்கித் தொழுது அவரை உருகிப் பாசுரங்கள் பாடிக் கொண்டு இருந்தார்.

திருவரங்கப் பெருமானுக்குத் தீர்த்த கைங்கரியம் மேற்கொண்டிருந்தவரான லோகசாரங்கர் என்னும் அந்தணர் தாம் தீர்த்தம் கொண்டு போவதற்குப் பொற்குடத்தை எடுத்து வந்தார். பொன்னித் துறையில் யாழிசைத்துப் பாடிக் கொண்டிருந்த திருப்பாணாழ் வாரின் குலச்சிறுமையை எண்ணி வெறுப்புற்ற வராய் ''எட்டச் செல்'' என்று பலமுறை உரக்கக் கூறியும் யாழிசையில் மனம் ஒன்றியிருந்த திருப் பாணாழ்வார் உலகத் தொடர்பை மறந்திருந்தபடி யால் லோகசாரங்கர் குரலுக்குச் செவிசாய்க்கவில்லை.

அப்போது திருப்பாணாழ்வார் மேல் லோக சாரங்கர் ஒரு கல்எறிய, திருப்பாணாழ்வார் நெற்றி யில் அக்கல் பட்டு, இரத்தம் பெருகியது. உணர்வு பெற்ற திருப்பாணாழ்வார் தூர விலகிச் செல்ல, லோகசாரங்கர் தீர்த்தம் எடுத்துக்கொண்டு திருவரங்கன் சன்னதிக்குச் சென்றார். என்னே அதிசயம்? திரு வரங்கன் திருநெற்றியிலும் இரத்தம் பெருகியது.

''நமக்கு நல்லன்பரான திருப்பாண் பெருமாளை இழிவாக நினையாது நீர்சென்று நும் தோள்களில் அவரை எழுந்தருளிப் பண்ணி வாரும்'' என்று ஆணை பிறப்பித்தருளினார் திருவரங்கப் பெருமான்.

வழக்கம்போல் திருப்பாணாழ்வார் காவிரியின் தென்கரையில் நின்று திருவரங்கனை யாழில் வைத்துப் பாடிக் கொண்டிருந்தார். முதல்நாள் இறைவன் பிறப்பித்த அருளாணைக்கு இணங்க லோகசாரங்கர் திருப்பாணாழ்வாரை சாஷ்டாங்க மாகத் தெண்டனிட்டு வணங்கி ''அரங்கப் பெரு மானின் திருவருள் ஆணைக்கு இணங்க எம்தோள் மேல் ஏறி அரங்கனை சேவிக்க வரல் வேண்டும்'' என்று விண்ணப்பித்தார்.

''நீசனான அடியேன் திருவரங்கப் பெருநகரை மிதித்திட அஞ்சினேன்'' என மறுத்துரைத்தார் திருப் பாணாழ்வார்.

''தேவரீர் மிதித்திட வேண்டா! திருமால் பெரிய திருவடியின் திருத்தோளில் எழுந்தருளுதல் போல் எம் தோளில் தாங்களும் எழுந்தருளி வருக'' என்று வேண்டிக்கொண்ட லோகசாரங்கர் திருப்பாணாழ் வாரைத் தம் தோளில் ஏற்றிக் கொண்டு திருமால் அடியார்கள் புடைசூழக் கோயிலுக்குள் சென்று, அரங்கப் பெருமான் திருமுன்பு இறங்கிவிட்டார்.

முனிவாகனரான திருப்பாணாழ்வார் அரங்கப் பெருமானைப் பாதாதிகேசமாகக் கண்டு ஆனந்தித்து ''அமலனாதி பிரான்'' என வைணவ உலகம் கொண் டாடிப் போற்றும் திவ்விய பிரபந்தப் பாசுரங்களைப் பாடிப்போற்றினார்.

''அமலனாதி பிரான் அடியார்க்கு என்னை
ஆட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரையார் பொழில்
வேங்கடவன்

நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிள்
அரங்கத்து அம்மான் திருக்
கமல பாதம் வந்து என் கண்ணில் உள்ளன
ஒக்கின்றதே''

எனத் திருப்பாதம் தொடங்கி, சிவந்த பாட்டாடை, திருஉந்தி, திருவயிறு, திருவாய், திருக்கண்கள் என அரங்கப் பெருமானின் திவ்விய அழகை அங்குலம் அங்குலமாக அனுபவித்துக் கண்டும், பாடியும் கொண்டாடினார் திருப்பாணாழ்வார்.

''கொண்டல் வண்ணனைக் கோவலனாய்
வெண்ணெய்
உண்ட வாயன் என்உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன்அணி அரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''

என அரங்கனின் அழகைப் பருகிய கண்கள் இனி வேறொன்றினையும் காண மாட்டா எனக் கூறி, அரங்கனோடே இரண்டறக் கலந்து விட்ட திருப்பாணாழ்வார் பெற்ற திருவருளை என்னென்று வியப்பது?

இறைவனின் திருவடி சென்று சேர்வதற்குக் குலப்பெருமை ஒன்றும் வேண்டுவதில்லை. பக்திப் பெருமை ஒன்றே போதும் என்பதை நமக்கு நன்கு உணர்த்துகின்றது திருப்பாணாழ்வார் அருள்வரலாறு.

நான்காம் வருணம் எனக் கூறப்படும் கள்ளர் குடியில் தோன்றி, நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி எனும் வேதத்திற்கு ஆறங்கம் எனப் போற்றப்படும் பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல், திருவெழு கூற்றிருக்கை ஆகிய நூல்களை அருளிச் செய்தவர் வைணவ உலகம் கொண்டாடும் ''திருமங்கை ஆழ்வார்'' ஆவார்.

சோழ மன்னனின் சேனாதிபதியாய் தம் பராக்கிரமத்தால் பகைவர்களைக் கலக்கிய இவருக்குப் ''பரகாலன்'' என்பதும் ஒரு திருப்பெயர் ஆகும்.

சோழமன்னனின் ஆட்சிக்கு உட்பட்ட திருமங்கை நாட்டிற்கு அரசனாகப் பட்டம் சூட்டப்பெற்றதால் திருமங்கை மன்னர் ஆனார்.

''குமுதவல்லி'' என்னும் மங்கை நல்லாளை மணம்முடிக்க விரும்பி, அவள் விருப்பத்தின் பேரில் வைணவசமயத்தைத் தழுவி அவர்தம் விருப்பின் படியே திருமால் அடியார்க்கு அன்னதானம் செய்தல், திருமால் திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்தல் ஆகிய தெய்வக் கைங்கரியங்களில் ஈடுபட்டார்.

சோழ மன்னனுக்குக் கட்டவேண்டிய கப்பப் பணத்தையும், குமுதவல்லியின் விருப்பப்படி திருமால் திருப்பணிகளில் செலவழித்துவிட்ட இவர் தம் திருமால் பக்தியை என்னென்று போற்றுவது?

அன்னதானம், கோயில் திருப்பணி ஆகிய வற்றிற்குப் பொருள் வேண்டுமென வழிப்பறிக் கொள்ளையிலும் ஈடுபட்ட இவரைத் திருவரங்கனே வந்து செயல் நன்றாகத் திருத்தி ஆட்கொண்ட வரலாறு ஒரு அற்புத வரலாறு ஆகும்.


மணக்கோலம் பூண்ட மணமகனாய் அரங்கன் அநேக அணிகலன்களைப் பூண்டுவர, பரிவாரங்களோடு வந்த பரம்பொருளிடமே வழிப்பறி செய்தார் திருமங்கை ஆழ்வார். அரங்கனின் ஆபரணங்கள் யாவற்றையும் மூட்டையாகக் கட்டி, அவர் காலில் அணிந்திருந்த மோதிரத்தையும் கழற்ற முடியாமல் பற்களால் கடித்து வாங்கினார்.

அரங்கனின் ஆபரண மூட்டையைத் தூக்க முயன்ற திருமங்கையாழ்வாரால் அது முடியாமல் போகவே ''என்ன மந்திரம் செய்தாய்?'' என்று வாள்கொண்டு அரங்கனை மிரட்டினார் திருமங்கை ஆழ்வார்.

''நான் செய்த மந்திரம் என்ன என்பதைக் கூறுகிறேன் வா'' என அருகில் அழைத்துத் திருமங்கையாழ்வாருக்கு நாராயண மந்திரத்தை ஓதித் தம் திவ்விய சொரூபத்தையும் காட்டி ஆட்கொண்டார் அரங்கப் பெருமான்.

இவ்வாறு நாராயணராலேயே நாராயண உபதேசம் செய்யப் பெற்று ஆட்கொள்ளப் பெற்ற திருமங்கையாழ்வார், நாராயணமந்திர மகிமையை ஞாலம் அறியுமாறு அற்புதப் பாசுரங்களாகப் பாடி அறிவுறுத்தியுள்ளார்.

''வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர்தரும் கலவியே கருதி



''ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் திரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.''

''குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.''

இவ்வாறு 1523 பாசுரங்களைப் பாடியருளியிருப் பதோடு திருவரங்கம் விமானம், மண்டபம், கோபுரம், பிரகாரம் முதலானவற்றைக் கட்டி வைணவ உலகம் கொண்டாட வைகுந்தப் பதவியும் பெற்றுத் திகழும் திருமங்கையாழ்வார் திருவடிகளை நாமும் போற்றிப் புகழ்ந்து இன்புறுவோமாக!

இவ்வாறு பன்னிரு ஆழ்வார் பெருமக்களும் இப்பூவுலகம் சிறக்கப் பற்பல தெய்வத்திருப் பணி களை ஆற்றியுள்ளார்கள். ஆழ்வார்கள் ஆற்றிய அற்புத அருட்பணியை

''ஆழ்வார்கள் ஏற்றம் அருளிச்செயல் ஏற்றம்
தாழ்வேது மின்றியவை தாம் வளர்த்தார் -
ஏழ்பாரும்
உய்ய அவர்செய்த வியாக்கியைகள்
உள்ளதெல்லாம்
வையமறியப் பகர்வோம் வாய்ந்து''

எனப் போற்றிப் புகழ்கின்றது ''உபதேசரத்தின மாலை'' நூல்.

நாமும் ஆழ்வார்பெருமக்களின் திருவடிகள் போற்றி உய்வடைவோமாக!

ஆழ்வார்கள் வாழி!

அருளிச் செயல் வாழி! வாழி!

★ ★ ★

# திருமந்திர உபதேசம்

— "திருமந்திரச் செல்வர்"
திருமிகு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

பக்குவம் என்ற சொல்லுக்குத் தமிழ் அகராதி கொடுக்கும் ஒரு பொருள் முதிர்ச்சி என்பதாகும். ஆற்றல் என்ற பொருளும் உண்டு. பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுரையை நாம் அடிக்கடி பிறர் சொல்லக் கேட்கின்றோம். பக்குவம் என்பது தமிழ்ச் சொல்லேயாகும். "உணர்த்தும் அதிபக்குவர்க்கே யுணர்த்தி" என்ற அடி திருமந்திரத்தில், ஆறாந்தந்திரத்தில் 'பக்குவன்' என்ற தலைப்பின் கீழ் உள்ள பாடல் ஒன்றில் முதல் அடியாக வருகிறது.

அறிவு வளர்ச்சி என்பது வெறும் செய்திகளைச் சேகரிக்கும் ஒரு சாதனையாக அமையக் கூடாது என்பதும், கிடைத்த செய்திகளை மனம், புத்தி, சித்தம் ஆகிய உட்கருவிகள். உணர்ச்சிவசப்படாமல் தன் முனைப்பை முடிந்த அளவு தவிர்த்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதும், நடுவுநிலை என்ற கண் ணோட்டத்துடன் இதைச் செய்ய வேண்டுமென்பதும், பக்குவம் என்ற சொல்லுக்கு அறிஞர்கள் பொது வாகத் தரும் விளக்கமாகும். இந்த நிலையில், மனம் போன்றவற்றின் ஆய்வு செய்யும் ஆற்றல் பயன்படுகிறது என்பது மட்டுமின்றி எடுக்கப்படும் முடிவு, சம்பந்தப் பட்டவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கும் போது, முதிர்ச்சி என்ற சொல்லும் பக்குவம் என்பதற்குப் பொருளாக அமைகிறது.

அறிவின் வளர்ச்சியால் அனுபவமும், அந்த அனுபவத்தால் பொருளின் மெய்ப்பொருள் தன்மை யைக் காணும் ஆற்றலும் வெளிப்படும் போது, பக்குவமும் முதிர்ச்சியும் ஆழம் பெறுகின்றன. மனிதன், சமுதாயத்துடன் இணைந்து செயல்படுகின்ற போது இந்த ஆழ்நிலைக் கண்ணோட்டம் நிறைவையும், அமைதியையும் தந்து துணைபுரிகின்றது.

சமய தத்துவமும் பக்குவத்தைப் பற்றிப் பேசுகிறது. ஆனால், பக்குவத்தைப் பற்றி, சமயம் கொண்டுள்ள கருத்துகள் வேறானவை. வாழ்க்கை யில் தேவைப்படும் முதிர்ச்சி, மனம், புத்தி, சித்தம், தன்முனைப்பின் தீவிரம் ஆகியவற்றைப் பொருத்து உள்ளது. சமயம் பக்குவத்தைப் பற்றிப் பேசும்போது, உயிரின் பக்குவம் அல்லது முதிர்ச்சி என்பதை யே கோடிட்டுக் காட்டுகிறது. உயிர் பல பிறவிகள் வாயிலாக பல அனுபவங்களைப் பெற்று, படி நிலை வளர்ச்சியைப் பெறுகிறது. அதனால் முதிர்ச்சி ஏற்படுகிறது. இந்த முதிர்ச்சியின் விளைவாக ஒரு "இளைத்தல்" அல்லது "தளர்தல்" அனுபவம் உண்டா கிறது. இந்த அனுபவம் உடனே ஏற்படும் என்று சொல்ல இயலாது. ஆனால் ஒவ்வொரு உயிரும், இந்த அனுபவத்தைத் திருவருளின் நியதிப்படி, அதனுடைய அறிவின் வளர்ச்சிக்கு ஏற்பப்பெறு கிறது. திருவருள் விடாது இந்த வளர்ச்சியை கவனித்துக் கொண்டிருக்கின்றது. உயிரும், உடலும் திருவருளின் செயல்பாட்டினை முழுமையாகத் தெரிந்து கொள் வதற்கு பல காலம் எடுக்கலாம். ஆனால் சத்திநிபாதம் என்பது இளைப்பினை அனுபவிக்கும் உயிர்களுக்கு நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. இதை உயிர் கவனிக்கத் தவறிவிட்டாலும், திருவருள் தொடர்ந்து தன்னை உயிரில் பதித்துக் கொண்டேயிருக்கும்.

இதைத் தான்

"எவ்வாறு காண்பாள் அறிவு தனக்கெல்லை
அவ்வாறு அருள்புரிவான் ஆதி பரன்தானும்"

(திருமந்திரம் - உபதேசம்)

என்று திருமூலர் பிரான் எடுத்துச் சொல்வார்.

இளைப்பு என்ற ஒன்று உள்ளத்தில் தோன்றும் போது உலகத்தின் மீது வைத்திருந்த பற்று குறையும். உடலின் வழி இன்பம் பெற்றுத் துய்க்க வேண்டும் என்ற அவரவரின் தீவிரமும் குறையும். மனைவி, மக்கள், நண்பர்கள், சுற்றம் போன்றவர்கள், முன்பு இருந்த அளவுக்கு ஈர்க்க மாட்டார்கள்.

இது போன்ற தொடர்புகளும், வாழ்க்கை நெறியும், மனதை மாற்றி, புலன்களுடைய சேட்டை களை மிகைப்படுத்தி, சித்தத்தைக் கலக்கும் மாயை யின் செயல்பாடுகள் என்று உயிர் உணரத் தொடங்கு கிறது. இதைச் சொன்னது மாணிக்கவாசகப் பெருமான்.

''வைத்த நிதி, பெண்டிர் மக்கள் குலம்
கல்வியென்னும்
பித்த உலகில் பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கம் .....''

(திருவாசகம் - திருக்கோத்தும்பி)

சிவஞானம் பெற விரும்பும் சாதகனுக்கு இது ஒரு இக்கட்டமான கட்டமாகும். அவன் மேற் செல்ல வேண்டிய பாதை பிரிகிறது. எந்த பாதையில் செல்வது என்பதைப் பற்றி ஐயப்பாடு தோன்று கிறது. இந்த நிலையில், சாதகன், திருவருளால் பெரும் அளவு சோதிக்கப்படலாம். திருவருளின் திரோதான சத்தி (மறைப்புச் சக்தி) அவனுடைய கண்களை மறைக்கின்றது. உயிரின் ஆர்வத்தின் ஓட்டத்தைத் தடைப்படுத்தி, திருவருளின் தன்மையைக் காண விடாமல் செய்யும். இதை மறக்கருணை என்பார்கள்.

சாதகன் மனதிலே ஏற்படும் ஐயப்பாடுகள், குழப்பங்கள் ஆகியவற்றின் விளைவாக தவறுகள் செய்ய வாய்ப்புகள் தோன்றுகின்றன. இந்தக் கட்டத் தில் இருக்கும் சாதகனை பக்குவம் அல்லது முதிர்ச்சி அடையாதவன் என்றே குறிப்பிட வேண்டும். அறி யாமை நீங்குவதற்கான ஒளி அங்கே போதிய அளவு இல்லாததே காரணமாகும். அக ஒளி இல்லாதவர்களே. அத்தகைய ஆசிரியர்களாக கிடைக்கப்பெறும் போது, இருவருமே ''குருட்டாட்டம்'' ஆடுவது போலாகும் என்பார் திருமூலர் பெருமான்.

''குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்கா குருவினைக் கொள்வர்
குருடுங் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடும் குழி விழுமாறே''

(திருமந்திரம் - அபக்குவன்)

இங்கே குருடு என்பது அகக்கண் திறவாமை யும், அறிவின்மையும் ஆகிய நிலை. அபக்குவன் மாயையாகிய கண்ணாடியின் மூலம் உலகத்தைப் பார்க்கின்றான். ஆணவ மலம் பொருள்கள் பற்றிய உண்மையைத் திரித்துக் காட்டுகிறது. உலகத்தை பொய் என்று அவனால் தெரிந்து கொள்ள இயல வில்லை. தகுதி வாய்ந்த ஞானாசிரியன் அங்கே இருந்தாலும், அவனுடைய உபதேசத்தைக் கடைப் பிடித்து வினைப் பயனைப் போக்கிக் கொள்ள இயலவில்லை. சரியான வழியைக் காட்டினாலும், அபக்குவன் புறக்கடை வாயிலை விரும்பியே சென்று விடுவான் என்கிறார் திருமூலர் பெருமான். அபக்குவனுக்கு தக்க பாதை காட்டப்பட்டாலும் அவன் அவ்வழி செல்லுவதில்லை.



''மனத்தில் எழுந்ததோர் மாயக் கண்ணாடி
நினைப்பின் அதனின் நிழலையும் காணார்
வினைப்பயன் போக விளக்கியும் சொன்னார்
புறக்கடை இச்சித்துப் போகின்றவாறே''

(திருமந்திரம் - ஆறாம் தந்திரம் - அபக்குவன்)

மனம், மொழி, மெய் ஆகியவை ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். அங்கே முதிர்ச்சியைக் காண லாம். பக்குவம் அடையாதவர்கள் மனம், மொழி, மெய்யாகிய உடல் ஆகியவற்றை, அந்தந்த கருவி கள் செல்லும் வழி, ஒன்றோடொன்று முரண்படும் வகையிலும் இயக்குவார்கள். அத்தகையவர்களை நல்ல ஞானாசிரியர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இது பற்றி உலகோர் தவறாகக் கருதினாலும், தங் களுடைய முடிவில் மாறமாட்டார்கள். அதாவது அபக்குவர்களுக்கு நல்ல ஞானாசிரியர்களின் அருள் கிட்டாது.

''வாயொன்றும் சொல்லி, மனமொன்று சிந்தித்து
நீயொன்று செய்யல் உறுதி நெடுந்தகாய்
தீ யென்றுங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்
பேயென்றிங் கென்னைப் பிறர் தெளிகிலாரே''

(திருமந்திரம் - அபக்குவன்)

இறை உணர்வு பெற விரும்பும் சாதகன், பக்குவனாதற்க்கு வேண்டிய நெறிகளை திருமூலர் பெருமான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறார். அவன் வேண்டுவது அறியாமையாகிய இருள் தன்னிடமிருந்து நீங்கி, எந்நாளும் தன்னைச் சாராத வகையில் பாதுகாப்பைத் தரும், நிலை பேறுடைய ஒளியாகும். ''விடியாமை காக்கும் விளக்கதுவாமே'' என்றார் திருமூலர் பெருமான். அந்த ஒளியைக் கொடுப்பவன் ஞானாசிரியன். அதற்குக் காணிக்கையாக ஞானாசிரியன் சாதகனிடமிருந்து எதிர்பார்ப்பது, அந்த சாதகன், பாசத்தை நீக்கும் தவங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். முத்தி பேற்றினை அடைவதில் தீவிர நாட்டம் கொள்ள வேண்டும். உலகியல் தத்துவங்களிலிருந்து தன்னை கழட்டிக் கொள்ள வேண்டும். மெய்ப்பொருளை நாடுவதிலேயே தன்னுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும். இது போன்ற நெறிகளை மேற்கொள்ளாதவர்களுக்கு குருவருள் கிட்டாது; அறியாமையை நீக்கும் ஒளியும் காணப்பெறாது என்று திருமூலர் பெருமான் விளக்குகின்றார் (திருமந்திரம் - அபக்குவன்)

உலக ஈடுபாட்டை நீக்கி, இறையுணர்வு பெறத் தயாராகும் வளர்ச்சியே பக்குவம் அல்லது முதிர்ச்சி எனப் பெயர்பெறும். ஆன்ம பரிபாகம் என்றும் இதைக் கூறுவதுண்டு. ஆன்மா தன்னைத் தூய்மைப் படுத்திக் கொள்வதே ஆன்ம பரிபாகம். மலங்களிலிருந்து விடுபடுவது என்பது ஒரு பிரதானமான குறிக்கோளாக அமைகிறது. அதற்கான வழியைக் காட்டுவிக்கும் ஆசான் ஒருவனை அடைய வேண்டுமென்ற துடிப்பு ஏற்படுகிறது. இறைவனை எல்லா வகைகளிலும் பணிந்து தனக்கு அருள் புரிய வேண்டும் என்பது வேண்டுகோளாக அமைகிறது. உள்ளமும் உயிரும், ஆசானைப் பெற்று அவனுடைய திருவடிகளைத் தலையில் சூட்டிக்கொள்ள வேண்டும் என்கிற அதி தீவிரமான ஆர்வம் பிறக்கின்றது. நிலையுடைய பொருள், நிலையற்ற பொருள் ஆகியவற்றின் தன்மையைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகிய படிகளில் நின்று அறிந்து கொண்டு, ஞானாசிரியனைப் பெற்று, மேற்கொண்டு ஞானம் பெறக் காத்திருப்பவன் பக்குவம் அடைந்த சாதகன்.

நற்பண்புகள், வாய்மை, தயவு, விவேகம், இரக்கம் உடைமை, பரம் பொருளை அறியும் அறிவு ஞானாசிரியனை நிழல்போல் நீங்காமை, இறை ஞானம் பற்றிய நூல்களை ஆராய்ந்து தெளிதல், அந்தத் தெளிவில் புத்தம் புதிய அனுபவங்களைப் பெறுதல் போன்றவை. பக்குவம் அடைந்த நற்சீடனின் பண்புகளாகும் என்பார் திருமூல நாயனார்.

''சற்குணம் வாய்மை, தயாவிவே கம்தன்மை
சற்குரு பாதமே சாயை போல் நீங்காமே
சிற்பர ஞானம் தெளியத் தெளிவோர்தல்
அற்புதமே தோன்றல் ஆகும் சற்சீடனே''

(திருமந்திரம் ஆறாந்தந்திரம் - பக்குவன்)

ஆன்ம பரிபாகம் என்பது சாதகன் செய்த தவத்தின் பயன் என்பர் சான்றோர்கள். இறைவன் தன்னை நன்றாகப் படைத்தனன் என்றார் திருமூலர் பெருமான். முன்னம் பிறவிகளில் அவர் செய்த தவமே அதற்குக் காரணம் என்பதும் புலனாகிறது. அவர் செய்த தவத்தின் விளைவாக அவருடைய படைப்பு சிறந்ததாக அமைந்தது. அதைச் செம்மையாக பயன் படுத்துவதற்கு இறைவனே அவருக்கு ஒரு குறிக்கோளைத் தருகிறான். அது என்ன குறிக்கோள்? தன்னை நன்றாக தமிழ்ச் செய்யுமாறு இறைவன் விரும்புகிறான். தமிழ் அனுபவமும், இறை உணர்வும் ஒரே தன்மையுடையவைகளாக இருப்பதால், இறைவன் திருமூலரைத் தமிழ்ச் செய்யுமாறு பணிக்கின்றார். இதற்கெல்லாம், திருமூலர் செய்த தவம் அடிகோலிற்று என்று கருதுவதில் தவறில்லை.

தவத்திற்கு முன்வருவது துறவு முன் வந்தாலும் தவமும் துறவும் இணைந்தே செல்லும். இறைவன் முற்றிலும் துறந்தவன். இதை அறிந்து கொள்ள வேண்டும். துறந்தவர்களுடைய பிறவியை அறுக்கவும் செய்வான். துறந்தோரே, சிவப்பரம் பொருளை அடைவதற்குத் தகுதியுடையவர் என்பதும் புலனாகிறது. இந்தத் துறவு அகத்துறவேயாகும். அகத்துறவின்றி புறத்துறவு துறவாகாது. இங்கே, திருமந்திரப் பாடல் ஒன்று அனுபவித்து மகிழத்தக்கது.

''அறவன் பிறப்பிலி யாருமிலாதான்
உறைவது காட்டகம் உண்பது பிச்சை
துறவறங் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி அறுத்திடும் பித்தன் கண்டீரே''

(திருமந்திரம் ஆறார்தந்திரம் - துறவு)

தவத்தை மேற்கொள்வதும், உயிரினுடைய முதிர்ச்சியின் விளைவேயாகும். முன்னைப் பிறவிகளிலே செய்த தவத்தால், உயிர் சிவ புண்ணியங்களை ஈட்டுகிறது. அவற்றின் சிறப்பால், உயிருக்கு உயிராகி நின்று துணைபுரிந்து வந்த இறைவன். ஞானாசிரிய வடிவு கொண்டு எழுந்தருளி, உயிரை ஆட்கொள்கிறான்.

திருஞானசம்பந்தர் போன்ற அருளாளர்கள் முற்செய்த தவத்தின் காரணத்தாலேயே சிவஞானம் அடையும் பேற்றினைப் பெற்றார்கள் என்று சிவஞான

போதம் (எட்டாம் சூத்திரம் - முதல் அதிகரணம்) தெளிவுபடுத்துகிறது.

தவம் மேற்கொள்ள வேண்டுமென்ற நாட்டம் திருவருள் உயிருடன் கலந்து நின்று உயிருக்குள்ள உலக பற்றை மாற்றுகிறது என்பது பொருள். தவத்தின் முடிவு சிவஞானம் பெற்று சிவானந்தத்தில் திளைத்திருப்பதாகும். தவமென்பது சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளை மேற்கொண்டு, சிவப்பரம்பொருளிடம் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுதலாகும். இத்தகைய தவத்தின் விளைவாக இருவினை ஒப்பு நிகழும் இந்த நிலையில் உயிரானது, மேலும் தனது தவத்தைத் தீவிரப் படுத்தி இறை ஞானம் பெற வேண்டுமென்ற ஒரே குறிக்கோளில் தனது அறிவைச் செலுத்தும். வேறொன்றையும் பார்க்காது.

''பனைத்தொழிந்தேன் பரமா உனைநாடி''

என்றார் திருமூலநாயனார்.

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனார் திருத்துறையூர் என்ற தலத்திற்கு வருகிறார். இறைவனை மலரால் வழிபடுகின்றார். அவநெறியில் செல்லாமல் என்னைத் தடுத்தாட்கொண்டாய், எனக்கு தவநெறி தந்தருள வேண்டுமென்று கேட்கிறார்.

''சிவனுறையுந் திருத்துறையூர் சென்றணைந்து
தீவினையால்
அவநெறியே செல்லாமே தடுத்தாண்டாய் அடியேற்குத்
தவநெறி தந்தருள்'' என்று தம்பிரான் முன்னின்று
பவநெறிக்க விலக்காகும் திருப்பதிகம் பாடினார்''

இது சேக்கிழாருடைய திருவாக்கு. (பெரிய புராணம் 225)

''துறையூர்த் தலைவா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே''

என்பது சுந்தரரின் வேண்டுகோள்.

தவநெறி என்பது ஞானநெறி என்றும், சிவ பூசையில் செல்லும் வழி என்றும், மனதை புலன் வழி செல்ல விடாது. ஒன்றுவித்து, சிவபெருமானை இடைவிடாது நினைத்தலும், வழிபடுதலும் தவ நெறி என்று சான்றோர் விளக்கியுள்ளனர்.

''சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்
நலம் தீங்கிலும் உனை மறந்தறியேன்
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்''

என்று திருநாவுக்கரசர் பெருமான் திருவதிகைத் திருக்கோயிலில் தான் பாடிய முதலாவது திருப்பதிகமாகிய ''கூற்றாயினவாறு'' என்ற திருப்பதிகத்தில் பாடுகிறார். அவர் சமண சமயத்தில் இருந்த போதும், தனது மனமும், செயல்பாடும் இவ்வகையில் அமைந்ததாகச் சொல்வார். ஆயினும் அவர் சமணத்திற்குச் சென்றார். கொல்லாமை என்ற ஒரு அறம் அவரை அங்கே ஈர்த்துச் சென்றது. அது முழுமையான அறம் ஆகாது. அதற்கு ஆதாரமாக கடவுள் என்ற ஒன்று அங்கு இல்லை. ''ஒருவர் தலைக்காவல் இல்லாமையால்'' இது நிகழ்ந்தது என்ற அப்பர் பெருமானின் விளக்கம் இப்பாடலிலேயே வருகிறது. இந்த விளக்கம் ஒன்று அப்பரின் செயல்பாட்டுக்குப் போதுமா என்ற ஐயப்பாடு எழும்போது, சேக்கிழார் பெருமான் ''நல்லாறு தெரிதற்கு நம்பர் அருளாமையால்'' என்று ஒரு கருத்தினைத் தெரிவிக்கின்றார். திருவருள் கூடவில்லை என்பதே இதன் நுட்பமாகச் சான்றோர் கருதுகின்றனர்.

இங்கே தான், திருநாவுக்கரசரின் தமக்கையான திலகவதியார் தன் பணியைச் செய்ய முன்வருகிறார். இப்பணிக்காகவே. அவர் திருத்தொண்டில் நிற்கின்றார். திருநாவுக்கரசரை மீண்டும் சைவத்திற்கு அழைத்து வரவேண்டி இறைவனின் துணையை நாடுகிறார். சூலை நோயுடன் திருநாவுக்கரசர் திருவதிகை வந்தடையும் போது திருநீறு வழங்கி ஐந்தெழுத்து ஓதி சிவத்தின் திருமுன் தாமே குருவாகின்றார்.

சாதகர்களுடைய பக்குவ நிலையை அறிந்து கொண்டு, சிவப்பரம்பொருள் குருவாக வந்து உணர்த்துவது தனித்தன்மை வாய்ந்தது. திருஞான சம்பந்தருக்கு பாலூட்டி மெய்ஞ்ஞானத்தை அருளுகிறார். அப்பருக்கு சூலை நோய் கொடுத்து ஆட்கொள்கிறார். மணிவாசகப் பெருமானுக்குக் காலை (திருவடி)க் காட்டி தனதாக்கிக் கொள்கிறார். குருவருள் இன்றித் திருவருள் கூடாது என்பது தெளிவு. சாதகனின் பக்குவமே குருவைக் கூட்டிவிக்கும் என்பதும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது. சாதகன் முதிர்ச்சியடையத் துணைபுரிவது திருவருள். திருவருளே சற்குருவை சாதகனுக்கு புலப்படச் செய்கின்றது. சற்குருவன்றி மற்றவர்கள் குருவாக மாட்டார்கள். சற்குருவைப் பற்றி மேலும் சிந்திப்போம்.

★★★

# வையகம் காக்கும் வைகுண்ட மூர்த்தி

## திருக்குட நீராட்டு விழா காணவாரீர் வாரீர்!

- டாக்டர் வை. பழனிச்சாமி, இ.ஆ.ப. (ஓய்வு)
தமிழக மாநிலத் தேர்தல் ஆணையர், சென்னை - 600 026.

*ஈரேழு தேவலோகம்*
*வைகுண்டம் விட்டு...*
*வையகத்துயிர்களைக்*
*காக்க வந்த பெருமானே!*
*வைகுண்ட மூர்த்தியாரே!*
*உமைக் கையெடுத்துக்கும்பிட்டுக்*
*காத்தருள வேண்டுகிறோம்*
*கீர்த்திதனைத் தந்தருள்வாய்....!*

வைகுண்ட மூர்த்தியாரை வணங்க பக்தர்களால் அன்றாடம் பாடப்படும் பாடல் இது. வைகுண்ட வாசி யான இந்த வைகுண்டமூர்த்தியார் அங்குள்ள ஈரேழு தேவலோகம், சுகபோக வைகுண்ட வாசம் அனைத்தையும் தியாகம் செய்து விட்டு பூலோக உயிர் களைக் காப்பதற்காக பூலோகத்தில் வந்து ஆங்காங்கே நிலைகொண்டுள்ளார் என்பதை இந்தப் பாடல் வரிகள் தெரிவிக்கிறது. இவ்வாறு நிலை கொண்டுள்ள வைகுண்ட மூர்த்தி தென்னிந்திய கிராமத் தெய்வங்களில் கிராமத் தைக் காக்கும் முதன்மை காவல் தெய்வமாக விளங்கும் அய்யனாராகவும், தர்மசாஸ்தாவாகவும், கேரளாவில் சபரிமலையில் ஐயப்பனாகவும் பல்வேறு பெயர் களில் பல ஊர்களில் எழுந்தருளிப் பக்தர்களைக் காத்து வருகிறார்.

### வரலாற்றுப் புகழ்

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம் சுந்தரபாண்டியம் கிராமத்தில் 'பெரியகோயில்' என்று அழைக்கப்படும் வைகுண்டமூர்த்தி சுவாமி கோயிலில் தர்மசாஸ்தாவாகவும் அய்யனாராகவும் இருவேறு உருவங்களில் எழுந்தருளி அப்பகுதி மக்களைக் காத்து வருகிறார். வைகுண்டமூர்த்தி சுவாமி கோயில் கி.பி. 1620-ம் ஆண்டில் தற்போதைய சுந்தர பாண்டியம் பகுதியை ஆட்சி செய்து வந்த மாறவர்மன் சுந்தர ப்ாண்டியனால் கட்டப்பட்டு வரலாற்றுச் சிறப்பு டன் திகழ்கிறது. இக்கோயிலில் அந்த மன்னனின் கலை நயத்தை வெளிப்படுத்தும் அழகிய சிற்ப ஓவியங்கள் இன்னும் அவனது புகழைப் பறைசாற்றும் வகையில் எழிலுற அமைந்துள்ளன.

### கோயில் சிறப்பம்சம்

பல ஊர்களில் காவல் தெய்வமாக, அந்தந்த ஊர்களில் எல்லைகளில் எழுந்தருளியுள்ள அய்யனார், எல்லா இடங்களிலுமே தவக்கோலத்தில் தனியாகக் காட்சியளிப்பார். ஆனால், இக்கோயிலில் பூரண, புஷ்கலா என்ற இரு பெருந்தேவியருடன் சேர்ந்து தம்பதி சகிதமாகக் காட்சியளிக்கிறார். மேலும் 61 பந்தி 21 சேனை தளங்களுடன் தமது பரிவாரங்களுடன் காட்சியளிக்கிறார். குழந்தை பாக்கியம் வேண்டு வோர்க்கு அருள் பாலிக்கும் தன்மையுடையவர். அதற் காகவே நாள்தோறும் இங்கு பக்தர்கள் வருவதுண்டு.

### மாமுண்டி கருப்பசாமி

இங்குள்ள 21 சேனை தளங்களுக்கு முதன்மை யானவர் மாமுண்டி கருப்பசாமி. மூலஸ்தானத்திற்கு வலப்புறம் தனி சன்னிதானத்தில் கம்பீரமாக காட்சி யளிக்கிறார். ஆங்கிலேயர் ஆட்சியில் வெள்ளைக்கார துரை ஒருவன் சுவாமியை அலட்சியம் செய்ய, அந்த வழியாக குதிரையில் சென்ற அந்த துரையை குதிரை யோடு சுவாமி தூக்கி எறிந்ததாகவும், தவறை உணர்ந்த அவன் சுவாமிக்காக தனது குதிரையை விட்டுச் சென்றதுடன் குதிரை பீடமும் 21 அடி உயரத்தில் அமைத்ததாகவும் வரலாறு கூறுகிறது.

இந்தக் குதிரை பீடத்தில் தான் வைகுண்ட மூர்த்தி சாஸ்தா வடிவில் அமர்ந்து பாரிவேட்டைக்குச் செல்வதாக கூறப்படுகிறது. இதனை மெய்ப்பிக்கும் பொருட்டு வைகுண்ட மூர்த்தி சுவாமி வேட்டைக்கு போகும்காட்சியுடன்சாஸ்தாவாக கோயிலுக்கு வெளியே யும், தம்பதி சகிதமாக அய்யனாராக கோயிலுக்கு உள்ளே யும் இரு வேறுபட்ட அவதாரத்தில் ஒரே கோயிலில் அருள்பாலிக்கிறார். இது இக்கோயிலின் கூடுதல் சிறப்பம்சமாகும்.

### பாரிவேட்டை

இங்கு முக்கியத் திருவிழா பாரிவேட்டை. துஷ்டசக்திகளை வேரறுக்கவும், தன்னைச் சுற்றி

சார்ந்துள்ள துஷ்ட தேவதைகள், 21 சேனை தளங்களுக்கு ரணபலி வழங்கவும் வருடம் ஒரு முறை அய்யனார் வேட்டைக்குச் செல்வதாக ஐதீகம். இதற்காக நடத்தப்படும் பாரிவேட்டை திருவிழாவில் ஆடு, கோழிகளை பலியிட்டு அதன் ரத்தத்தைச் சோற்றில் கலந்து நடு இரவு 2 மணியளவில் காளி பீடம் அருகே புளியமரத்தின் மீது அந்தரத்தில் வீசுவார்கள். வீசப்பட்ட அது கீழே விழாது என்று இன்றும் பக்தர்களால் கூறப்படுகிறது. இத்திருவிழா மாசி மாதம் அமாவாசையை ஒட்டி 3 நாட்கள் கோலாகலமாக நடத்தப்படுகிறது. இதற்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்தது சித்திரை திருவிழா. இதை ஒட்டி காலடி பூஜை நடத்தப்படுகிறது.

அந்நாளில் வைகுண்டமூர்த்தி சுவாமி குதிரை வாகனத்திலும், அம்மன்கள் இருவரும் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்திலும், நடராஜர் சிவகாமியம்மன் ஒரு பல்லக்கிலும் கோயிலை வலம் வந்து காட்சியளிப்பர். இது தவிர மகாசிவராத்திரி, நவராத்திரி போன்ற விழாக்கள் எழுச்சியோடு கொண்டாடப்படுகிறது.

**அமைவிடம்**

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புதூர் வட்டம் சுந்தரபாண்டியம் கிராமத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் கோட்டையூர் மெயின்ரோட்டில் அமைந்துள்ளது.

வரலாற்று சிறப்பு வாய்ந்த இக்கோயிலில் தற்போது சுமார் ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில், 3 அடுக்கு மூலஸ்தான கோபுரமும், மற்ற சன்னதிகள் இதர பகுதிகள் முற்றிலுமாக புதுப்பிக்கப்பட்டு உள்ளன. இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் இதற்கென திருப்பணி கமிட்டி அமைக்கப்பட்டு பணிகள் நடந்த விவரங்கள் மிக சுவையானவை.

**திருக்கோயில் திருப்பணி விவரங்கள் :**

திருக்கோயில் விருதுநகர் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர் பிரிவில் உள்ள பட்டியலைச் சேராத கோயில் ஆகும். இத்திருக்கோயில் பரம்பரை அறங்காவலர்களால் (பூசாரிகளால்) நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றது. இத்திருக்கோயிலுக்கு வருமானம் தரக்கூடிய சொத்துக்கள் ஏதும் இல்லாததுடன் வேறு வருவாய் ஏதும் இல்லை. தமிழக அரசின் ஒரு கால பூஜை வைப்பு நிதி உதவி திட்டத்தின் கீழ் தினசரி பூஜை நடைபெற்று வருகிறது.

கலைநயம் மிக்க சிற்பங்களுடன் கூடிய இக்கோயில் வருவாய் இல்லாததால் கவனிப்பாரின்றி மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தது. எனவே இத்திருக்கோயிலை சீரமைத்து கும்பாபிஷேகம் நடத்துவது சம்பந்தமாக 10.10.2002 அன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தி இதற்கான திருப்பணிக் குழு அமைக்கப்பட்டது. இத்திருக்கோயிலின் மூர்த்தி இப்பகுதி மக்களுக்குக் காவல் தெய்வமாக விளங்கி வருகிறது. இத்திருக்கோயிலில் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) நடைபெற்று கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியாலும் இத்திருக்கோயிலின் சந்நிதிகள், பரிவார மூர்த்திகளின் சந்நிதிகள், விமானங்கள், தளங்கள் மற்றும் சுற்றுச் சுவர் (திருமதிற் சுவர்) உட்பட அனைத்தும் பழுதடைந்த நிலையில் இருந்தபடியாலும், ரூபாய் 50.00 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி வேலைகள் தொடங்குவது சம்பந்தமாக 10.1.2003 அன்று திருப்பணிக் குழுவின் கூட்டம் நடத்தி திட்ட மதிப்பீடு, திருப்பணிகளுக்கான நிதி ஆதாரம் திரட்டுதல், திருப்பணி வேலைகளைத் தொடங்கும் நாள் நிர்ணயம் செய்தல் குறித்து முடிவு செய்யப்பட்டது.

சென்னை, சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சிவகங்கை இணை ஆணையர் மற்றும் விருதுநகர் உதவி ஆணையர் ஆகியோரது உத்தரவுகளின் மூலம் 10.3.2003 அன்று மதுரை திருப்பரங்குன்றம் (சிவாகம சிரோமணி) சிவபதி எஸ்.கே. சந்திரசேகர சிவாச்சாரியார் (திரு கே. ராஜா பட்டர்) அவர்களால் மேற்படி திருக்கோயிலில் பாலாலயம் நடைபெற்றது.

திருப்பணி வேலைகள் அனைத்தும் திருப்பணிக் குழு பொது மக்களிடம் இருந்து வசூல் செய்த ரூ. 5.00 இலட்சம் நன்கொடை மூலமும், உபயதாரர்கள் மூலமாக ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டிலும் (கீழே கண்டுள்ள விவரப்படி), அரசின் நிதி உதவியாக ரூ. 12.00 இலட்சம் அதாவது விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கிராமத் தன்னிறைவு திட்டத்தின் கீழ் திருக்கோயிலின் சுற்றுச் சுவர் (திருமதிற் சுவர்) கட்டுவதற்கு ரூ. 8.00 இலட்சம் மதிப்பீட்டிலும், தரைத் தளம் அமைப்பதற்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் ரூ. 12.00 இலட்சம் மதிப்பீட்டில், பொதுமக்கள் பங்குத் தொகையாக செலுத்த வேண்டிய 25 சதவீதம் அதாவது ரூ. 3.00 இலட்சத்துடன் அரசின் பங்காக ரூ. 9.00 இலட்சத்திற்கான நிதி உதவியும் பெற்று மேற்காணும் வேலைகள் நடைபெற்று வருகிறது.

மேலும் திருக்கோயிலில் யாத்ரீகர் மண்டபம் (பக்தர்கள் தங்கும் விடுதி) ரூ. 8.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணை


யர் அவர்களின் பொதுநல நிதியிலிருந்து நிதி உதவி பெற்று அத்துடன் தெப்பம் தூர் வாரும் பணியையும் சேர்த்து தொடங்கப்பட்டு உள்ளது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் உத்தரவுகளின்படி உபயதாரர்களைக் கொண்டு நடைபெற்று வருகிற வேலைகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | திருப்பணி வேலையின் பெயர் | மதிப்பீடு | உபயதாரர் விபரம் |
|---|---|---|---|
| *1.* | அருள்மிகு வைகுண்டமூர்த்தி சுவாமி சன்னதி மற்றும் விமானம் புதுப்பித்தல் | *1,75,000* | டாக்டர் வி. ஜெயக்குமார், மதுரை. |
| *2.* | அருள்மிகு மாமுண்டி கருப்பசாமி சன்னதி மற்றும் விமானம் புதுப்பித்தல் | *1,70,000* | 1) திரு இராசகோபால்.<br>2) திரு. இரா. திருமேனி. இராசபாளையம். |
| *3.* | அருள்மிகு கன்னிமூல கணபதி சன்னதி மற்றும் விமானம் புதுப்பித்தல். | *1,30,000* | திரு எஸ். முத்தழகு, சென்னை. |
| *4.* | அருள்மிகு பெரியகருப்பர் சன்னதி மற்றும் விமானம் புதுப்பித்தல். | *2,10,000* | டாக்டர் வை. பழனிச்சாமி, இ.ஆ.ப. (ஓய்வு)., சென்னை.<br>திரு கம்பராயர், கம்பம். |
| *5.* | அருள்மிகு பழனியாண்டவர் சன்னதி மற்றும் விமானம் புதுப்பித்தல். | *1,30,000* | 1) ஆர். அனந்தநாராயணன் குமாரர்கள், சென்னை.<br>2) ஆர். சுப்பிரமணியம், மதுரை. |
| *6.* | அருள்மிகு பேச்சியம்மன் மற்றும் ராக்காச்சியம்மன் சன்னதி திரும்பக் கட்டுதல். | *82,000* | 1) திரு H. இராஜகோபாலன், சென்னை.<br>2) திரு சுந்தரேசுவரன், மதுரை. |
| *7.* | அருள்மிகு மகாலிங்கம் சன்னதி திரும்பக் கட்டுதல். | *35,000* | திரு எஸ். இராசாமணி, தென்காசி. |
| *8.* | அருள்மிகு சப்தகன்னியர் பூமாலை ராஜா மற்றும் இலாட சன்னாசி சன்னதி திரும்பக் கட்டுதல். | *43,000* | திரு ஏ. இராமராஜ், மதுரை. |
| *9.* | அருள்மிகு பைரவர் சன்னதி திரும்பக் கட்டுதல் | *35,000* | திரு வி. முனியப்பன், திருவில்லிபுத்தூர். |
| *10.* | கிழக்கு பரிவார சன்னதி திரும்பக் கட்டுதல். | *50,000* | திரு ஆர். தியாகராஜன், சென்னை. |
| *11.* | தெற்கு பரிவார சன்னதி திரும்பக் கட்டுதல். | *82,000* | 1) திரு. எஸ். திருமுருகன், சுந்தரபாண்டியம்.<br>2) திரு வி.வி. இராமன், மதுரை. |
| *12.* | அருள்மிகு நாகர் சன்னதி திரும்பக் கட்டுதல். | *30,000* | திரு எஸ். நாராயணன், சென்னை. |
| *13.* | மடப்பள்ளி கட்டுதல். | *50,000* | திரு ஆர். வைத்தியநாதன், கோட்டையூர். |

| வ. எண். | திருப்பணி வேலையின் பெயர் | மதிப்பீடு | உபயதாரர் விபரம் |
|---|---|---|---|
| 14. | நிர்வாக அலுவலகம் மற்றும் மோர் மடம் கட்டுதல். | 50,000 | 1) இரவிக்குமார் மற்றும் 2) இராமச்சந்திரபுரம் கோவில் அடிமைக்காரர்கள் |
| 15. | மாரியமமன் (பூசாரிமார்) மண்டபம். | 10,000 | 1) திரு ச. பழனியப்பன், பொறியாளர், சென்னை 2) திரு இராமநாதன், தொழிலதிபர், திருச்சி. |
| 16. | வெறிவேட கருப்பசாமி | 35,000 | திரு பால்பாண்டி அனுமந்தம்பட்டி |
| 17. | அய்யனார் வாகனம் (குதிரை பீடம்) புதுப்பித்தல். | 50,000 | திரு பரமேஸ்வரய்யர் மற்றும் குடும்பத்தினர் |
| 18. | ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்தல். | 50,000 | |
| 19. | மின் மோட்டார் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல். | 20,000 | 1) திரு ஆர். ராமச்சந்திரன், 2) திரு ஆர். கோவிந்தராசன், 3) திரு ஆர். மன்னர் மன்னன், மதுரை. |
| 20. | திருக்கோயிலுக்குத் தேவையான மின்வசதி செய்து கொடுத்தல். | 20,000 | திரு ஏ. அய்யப்பன், மதுரை. |
| 21. | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து சன்னதிகளுக்குக் குடிநீர் குழாய் அமைத்தல். | 10,000 | திரு டி.டி.பி. சுந்தரராஜ், மதுரை. |
| | மொத்தம் | 14,67,000 | |

சுந்தரபாண்டியம் அருள்மிகு வைகுண்ட மூர்த்தி (அய்யனார்) சுவாமி திருக்கோயில் அமைந்துள்ள சுந்தரபாண்டியம் - கோட்டையூர் சாலை மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் இருந்தது. இதனால் ஏற்கனவே பேருந்து வழித்தடமாக இருந்து தற்போது பேருந்து செல்ல முடியாத நிலையில் இருந்தது. சுந்தரபாண்டியம் கிராமத்தின் வடக்கே சுந்தர பாண்டியம் - கோட்டையூர் சாலையில் 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அருள்மிகு வைகுண்டமூர்த்தி (அய்யனார்) சுவாமி திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் 10.3.2003 அன்று பாலாலயம் நிகழ்ச்சியுடன் நடந்தேறி வரும் நிலையில், மேற்படி சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் பொது மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாவதைக் கருத்தில் கொண்டு விருதுநகர், மாவட்ட ஆட்சித் தலைவர், சுந்தரபாண்டியம் முதல் கோட்டையூர் வரையிலான (கி.மீ. 0/4 முதல் 2/4 வரை) சாலை செப்பனிடுவதற்கு ரூ. 8.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து அதனை நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (பொது) மூலமாக அரசின் அனுமதி வேண்டி அனுப்பினார். பொதுமக்களுடைய சிரமத்தைக் கருதியும் இந்தச் சாலையில் அமைந்துள்ள அருள்மிகு வைகுண்டமூர்த்தி (அய்யனார்) சுவாமி திருக்கோயில் திருப்பணிகள் தடங்கலின்றி நடைபெறுவதற்கும் இந்த சாலையில் மீண்டும் பேருந்துப் போக்குவரத்தைத் தொடங்குவதற்கும் ஏதுவாக தமிழக அரசு



அருள்மிகு வைகுண்டமூர்த்தி திருக்கோயில் பாலாலய விழாவில் தமிழக மாநிலத் தேர்தல் ஆணையர் டாக்டர் வை. பழனிச்சாமி இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்ற காட்சி.

இச்சாலையின் மோசமான பகுதியான (கி.மீ. 0/4) முதல் 3/6 வரை) மேம்பாடு செய்யும் பொருட்டு 'முதலமைச்சரின் தனி பழுது பார்த்தல் திட்டம் 2003-2004'ல் ரூ. 16.00 இலட்சத்திற்கான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு மேற்கண்ட பணி செய்து முடிக்கப் பட்டுள்ளது. மேலும் இந்த சாலையில் கி.மீ. 3/6 முதல் கி.மீ. 5/8 வரையிலான பகுதியை மேம்பாடு செய்யும் பொருட்டு 'பேருந்து செல்ல இயலாத சாலைகளை மேம்பாடு செய்தல் திட்டத்தின்கீழ் ரூ. 7.20 இலட்சத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டு மேற் கண்ட பணி தொடங்கப்பட்டு முடியும் தருவா யில் உள்ளது. ஆக மொத்தம் ரூ. 23.20 இலட்சம் மதிப் பீட்டில் இந்த சாலை மேம்படுத்தப்பட்டு உள்ளது.

தற்போது மேலே சொல்லப்பட்ட அனைத்துப் பணிகளும் முடிவுறும் நிலையில் உள்ளதால் 10.3.2004 -அன்று நடைபெற்ற திருப்பணிக்குழு மற்றும் உபய தாரர் கூட்டத்தில் வரும் மே மாதம் 31-ஆம் தேதி, திங்கள் கிழமை காலை 9.30 - 10.00 மணிக்குள் கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பூர்வாங்கயாக பூஜை மே மாதம் 28-ஆம் நாள் தொடங்கி தொடர்ந்து 4 நாட்கள் நடைபெற உள்ளது. இத்திருக்கோயில் திருப்பணிகளில் ஆன்மீக அன்பர்கள் இத்திருக்கோயில் தெய்வங்களைக் குல தெய்வங்களாகக் கொண்டுள்ள பல்வேறு ஊர்களைச் சேர்ந்த பெருமக்கள் அனைவரும் இத்திருப்பணியில் ஆர்வமுடன் பங்கேற்று அருள்மிகு வைகுண்ட மூர்த்தி (அய்யனார்) சுவாமியின் அருளைப் பெறு வோமாக!

*வைகுண்டமூர்த்தியே சரணம்!*

*சாஸ்தாவே சரணம்!*

★★★

# கந்தன் தமிழ்க் கண்ணி

- திருமிகு தா. சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ்.
அரசுச் சிறப்புச் செயலாளர், தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

ஆடும் மயில்மேல் அழகாய் ஓடிவந்து முருகா உனைத்
தேடும் இந்த அடிமையை நீ தேர்ந்தெடுப்பதெந்நாளோ?

சாடும் சமர வேல்முருகா உன்திருவடியில் நான்
கூடும் அந்நாள் எனக்கு இனி எந்நாளோ?

வீடும் காடும் எல்லாம் வெறும் கானல்நீர் எனக்கு முருகா
வாடும் இவ்வேழையை நீ வாரி அணைப்பதெந்நாளோ?

ஆடும் மனத்தை அடக்காமல் பேயாய்த் திரியும் சேயே நான்
ஆடும் மயிலும் வேலோடு ஆறுமுகத்தைக் காண்ப தெந்நாளோ?

தேடும் காலன் வந்தால் குறத்தி மணாளா, தடுத்துஉமை
நாடும் இவ்வடிமைக்கு நற்கதி அருள்வதெந்நாளோ?

சுழித்தோடும் இவ்வாழ்க்கை ஆற்றில் தவிக்கும் நான்
கழித்தோடும் நாள் முருகா; இனி எந்நாளோ?

விழித்துப் பார்த்தால் மாய வாழ்க்கை மண்குடமே முருகா,
கொழுத்துத் திரியும் மனத்தை முழுதாய் அடக்கும்நாள் எந்நாளோ?

பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற நான் உன் திருவடியை
குறுகிப் பணிந்து முருகா கூடும் நாள் எந்நாளோ?

அன்னையென்று அப்பனென்று உன்னைச் சுற்றும் இம்மகனுக்கு
நின்னை உணர்ந்து உணர்ந்து உன்னுள் கூடும் நாள் எந்நாளோ?

சேவற்கொடியோன் திருவடியே சரணம் எனும் இவ்வடிமைக்கு
ஆவல்கொண்டு நீ அருளும் நாள் இனிதான் எந்நாளோ?

குறியும் கோலமும் உருவம் அருவமுமாய் இருக்கும் வேலவன்
பரிவும் பாசமும் அன்பும் கொண்டு எனை அணைக்கும் நாள் எந்நாளோ?



வேதமும் நாதமும் கீதமுமாய் இருக்கும் குறத்திபிரான்
கீதையின் நாதன்போல் கருத்தை எனக்குக் கூறும் நாள் எந்நாளோ?

விண்ணில் தேவர் மனம் மகிழச் சூரரை மாய்த்த வேலனைக்
கண்ணில் கண்டு உளம்குளிர உருகும்நாள் எந்நாளோ?

கிழியும்படி சூரர்ப்பதியைத் தூளாக்கிய குறிஞ்சிக்கிழவர்
அழியும் இம்மாயையிலிருந்து விடுவிப்பதென்னாளோ?

விழிபோல் எண்ணி மான்மகள் மொழியை நுகரும் மணாளன்
அழியும் இந்த அன்பனை ஈடேற்றுவ தென்னாளோ?

தேவரும் மூவரும் யாவரும் போற்றும் வேல்முருகனை
தவறாய்த் தரணியில் வாழும் இவ்வடிமை தாவிப்பிடிப்பதென்னாளோ?

வாமனனாய்த்தோன்றி அருளைப் பொழிந்தோன் மருகோனுடன்
காமக்கலவியல் கனலாய் உருகும் இக்கயவன் இணைவது எந்நாளோ?

குத்திச் சூரனை கூறாய்ப்போட்ட குறத்திபிரானுடன்
பத்திப் பெருக்குடன் இப்பாவி கலப்பதென்னாளோ?

முத்துக்குமரனின் தித்திக்கும் திருவடி நிழலில்
கொத்து மலரோடு பணிந்து சேருவதெந்நாளோ?

★ ★

மெய்ப்பொருளாய் விளங்கும் மேலான முருகனுடன்
பொய்ப் பேசி உழலும் இப்பாவி இணங்குவதெந்நாளோ?

உறவென்று உமைமகன் முருகன்தான் எனநம்பும் இவ்வீனப்
பிறவிக்குக் கரையிலா அருளைக் காட்டுவதெந்நாளோ?

அருந்தமிழ்ச் செல்வன் வானவர் தலைவன் வேலவனுடன்
திருந்தாத் தீயனான நான் சேர்ந்து இணங்குவதெந்நாளோ?

காதலாய்க் கசிந்து கானக்குறத்திக்கு உருகும் கந்தனுடன்
பேதையாய் நின்று பரிதவிக்கும் இப்பாவி சேர்வதெந்நாளோ?

மின்னலென கிரௌஞ்ச மலையைப் பொடியாக்கிய வீரனவன்
தன்னலக்களையை எடுத்தவன் திருவடியைச் சேர்வதெந்நாளோ?

கன்னல் மொழியாள் வள்ளியை வேட்டவன் தாளுடன்
இன்னல் தீர்ந்து இப்பிறவியற இணைந்து கொள்வதெந்நாளோ?

தண்டமிழ்ச்செல்வி மான்மகளுடன் குலவும் குமரனோடு
தொண்டனாம் இவ்வடிமை இப்பிறவியற இணைவது எந்நாளோ?

கூர்வேலெடுத்துச் சூரனைமாய்த்த வெற்றிவேலவனுடன்
ஊர்போற்ற நன்பக்தனிவன் எனக்கூற, நாடுவதெந்நாளோ?

கந்தா குமரா கடம்பா கண்ணனின் மருகா முருகா உன்னுடன்
சிந்தா குலம்தீர சந்தோஷத்துடன் சேருவதெந்நாளோ?

தேடிக்கிடைக்காத செல்வ முத்துக் குமரன் சக்தித்திருமகனுடன்
நாடி அடியேன் அடிமை நான் கூடிக்கொள்வதெந்நாளோ?

குத்திச்சூரனை வென்று அமராவதி பெற்ற வேலவனுடன்
பக்திப்பெருக்குடன் இப்பாவி ஓடிக் கலப்பதெந்நாளோ?

தீரா விளையாட்டுப் பிள்ளை என் திருக்குமரன் முருகனுடன்
ஆரா அன்புடனும் ஆர்வமுடனும் இணைந்து கொள்வதெந்நாளோ?

வேல் வேல் வெற்றிவேல் எனக்கூறும் திருக்கூட்டத்தலைவனுடன்
சேல் திகழ் வயலூர் முருகா எனக்கூறி கூடுவதென்னாளோ?


பூமாலை சூட்டி, புகழ்ந்து புகழ்ந்து துதித்து முருகனுடன்
பாமாலை சூட்டிப் பக்தியைக்காட்டி பசாமுடன் இணங்குவதெந்நாளோ?

★ ★ ★

தரிசிக்கலாம் வாரீர்!

# நவகிரகத் திருக்கோயில்கள்

- இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு



## அருள்மிகு சிவசூரிய நாராயண சுவாமி திருக்கோயில், சூரியனார் கோயில் (சூரியன் ஸ்தலம்)

**அமைவிடம் :** கும்பகோணம் - மயிலாடுதுறை வழித் தடத்தில் ஆடுதுறையில் இருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்து வசதி உண்டு.

**இறைவன் :** அருள்மிகு சிவசூரிய நாராயண சுவாமி பெருமான்.

**இறைவி :** அருள்மிகு சாயாதேவி, உஷாதேவி

**தலவிருட்சம் :** வெள்ளெருக்கு

**தல தீர்த்தம் :** சூரிய புஷ்கரணி

**தல வரலாறு:** இமயமலையில் வாழ்ந்த காலவ முனிவர் என்பவர் முக்காலமும் உணர்ந்தவர். தனக்குத் தொழுநோய் ஏற்படப் போவதை முன்கூட்டியே அறிந்து நவக்கிரகங்களை நோக்கித் தவம் இருந்தார். அதன் பயனாக நவக்கிரக நாயகர்கள் அவர் முன் தோன்றி அவர் வேண்டிய வரத்தைக் கேட்டு அளித்த னர். இதனை அறிந்த பிரம்மதேவர் சினம் கொண்டு நவக்கிரகங்களை பூலோகத்தில் அவதரிக்குமாறும் தொழுநோய் பீடிக்கப்பட்டு உழலுமாறும் சாப மிட்டார். சாபம் பெற்ற நவநாயகர்கள் மனம் வருந்தி பிரம்மனிடம் வேண்ட, பிரமனும் நவநாயகர் களை பூலோகத்தில் காவிரி நதிக்கரையில் உள்ள அர்க்கவனத்தில் கார்த்திகை முதல் ஞாயிறு முதல் 12 ஞாயிறு தவம் செய்து திங்கட்கிழமை வைகறைப் பொழுதில் சிவபெருமானை வழிபட்டு, உதயாதி ஏழுநாழிகைக்குள் வெள்ளை எருக்கு இலையில் தயிர் அன்னத்தை இட்டு உண்டால் சாபம் நீங்கும் என்று அருளினார். அதன்படி நவநாயகர்கள் தவம் இருந்து சாபம் நீங்கினர். சூரியனை முதன்மையாகக் கொண்டு நவகோள்கள் இங்கு தவம் புரிந்ததால் இத்த லத்தில் நவகோள்களுக்கும் ஆலயம் ஏற்பட்டு சூரிய னார்கோயில் என்று பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

**வழிபட்டுப் பேறு பெற்றோர் :** இத்தலத்திற்கு வந்து தங்கியிருந்த சூரிய பகவானைப் பரிட்சித்து மகாராஜா, சந்திர பகவானைச் சித்ராங்கத பாண்டியன், அங்காரக பகவானைப் புரூவரசு. புத பகவானைச் சோமசன்மன், குரு பகவானை இந்திரன், சுக்கிர பகவானை தூமகேது, சனீஸ்வரனை நளமகாராஜன் ஆகியோர் முறையாக வழிபட்டு தோஷங்கள் நீங்கப் பெற்றனர்.

**தரிசன முறை:** இவ்வாலயத்தில் நவநாயகர்கள் வாகனமும் ஆயுதமும் இன்றி இரண்டு கரங்களுடன் அமைதியாக புன்னகை தவழும் முகத்துடன் அனுக் கிரக மூர்த்திகளாக காட்சி தருகின்றனர். கோபுர தரிசனம் செய்து இவ்வாலயத்தில் நுழைந்ததும் முதலில் கோள் தீர்த்த விநாயகரையும், அடுத்து விசுவநாதர் விசாலாட்சி அம்பாளையும் வழிபட வேண்டும். பின்பு சூரியனுடன் உஷா, பிரத்யுஷா

தேவிகளையும், எதிரில் காட்சி தரும் குரு பகவானையும் வழிபட வேண்டும். அடுத்துத் தென்சுற்றில் கீழே இறங்கி சனீஸ்வரன், புதன், அங்காரகன், சந்திரன், கேது, சுக்கிரன், ராகு முதலிய சுற்றுக் கோயில்களுக்குச் சென்று வழிபட வேண்டும். பிறகு சென்ற வழியே திரும்பி, கோள் தீர்த்த விநாயகரிடம் வந்து குறைகளைச் சொல்லி வேண்டிக் கொண்டு கொடி மரத்தின் பீடந்தொட்டு, ஒன்பது சுற்றுக்கள் வலமாக வந்து பீடத்தின் முன்பு ஆடவர்கள் அஷ்டாங்கமாகவும், மகளிர் பஞ்சாங்கமாகவும் வடக்கு பக்கம் தலைவைத்து வணங்க வேண்டும்.

**தோஷ நிவர்த்தி:** ஏழரை ஆண்டுச் சனி, அஷ்டமத்துச் சனி, ஜென்மச் சனி உள்ளவர்களும், நவக்கிரக தோஷம், உடையவர்களும் இத்தலத்திற்கு வந்து சுமார் இரண்டரை மாத காலம் அதாவது தொடர்ச்சியாக பன்னிரெண்டு ஞாயிற்றுக்கிழமை வரை தல வாசம் இருந்து நவ தீர்த்தங்களில் நீராடித் திருமங்கலக் குடி பிராணநாதரையும், மங்களாம்பிகையையும், நவகோள்களையும் முறைப்படி வழிபாடு செய்யின் தோஷங்கள் நீங்கப் பெறுவர் என்பது உறுதி.

களத்திர தோஷம், விவாகப் பிராப்த தோஷம், புத்திர தோஷம், புத்திரப் பிராப்த தோஷம், வித்தியாப் பிராப்த தோஷம் உடையவர்களும், சூரிய திசை சூரிய புத்தி உடையவர்களும் இத்தலத்திற்கு வந்து வழிபட்டால் தோஷம் நீங்கும். அனுக்கிரகம் உண்டாகும்.

**திருக்கோயில் முகவரி:**


மேலாளர்,
அருள்மிகு சிவசூரிய நாராயணசுவாமி திருக்கோயில்,
சூரியனார் கோவில், திருமங்கலக்குடி,
திருவிடைமருதூர் வட்டம் - 612 102.
தொலைபேசி: (0435) 2472349

## அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், திங்களூர் (சந்திரன் ஸ்தலம்)

**அமைவிடம் :** கும்பகோணம் - திருவையாறு வழித் தடத்தில் திருவையாற்றில் இருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்து வசதி உண்டு.

**இறைவன்:** அருள்மிகு கைலாசநாத சுவாமி

**இறைவி:** அருள்மிகு பெரிய நாயகி



**தீர்த்தம் :** சந்திரபுஷ்கரணி

**பாடியவர் :** திருநாவுக்கரசர்

**தலவரலாறு:** அப்பர் பெருமான் திங்களூருக்கு வரும்போது தமது பெயரில் பாடசாலை, கோசாலை, தர்மசாலை, தண்ணீர்ப்பந்தல், அன்னசாலை எனப் பலவும் கண்டு வியப்புறுகிறார். அதனை அமைத்தவர் அப்பூதி அடிகள் என்பதை அறிந்து அவரது வீட்டிற்குச் சென்றார். அப்பர் பெருமானுக்கு அமுது படைக்க, அப்பூதி அடிகள் தம் மகனை குருத்து வாழை இலை அறுத்து வர அனுப்புகிறார். வாழைத் தோட்டத்தில் பாம்பு கடித்து மகன் இறந்து விட்டதை அடிகளின் மகன் இறந்ததை கேட்ட அப்பர் பெருமான், பதிகம் பாடி இறந்த மகனை உறக்கத்தில் இருந்து விழித்தவனை போல் எழச் செய்து உயிர்ப்பிக்கிறார்.

**சந்திர பகவானின் பிறப்பு :** சந்திரனின் பிறப்பு பற்றி புராணங்களிலே மூன்று வகையான தகவல்கள் கிடைத்திருக்கின்றன. சந்திரன் திருமாலின் மார்பினிலே தோன்றியவன் என்பதை ''சந்திரமா மனஸோ ஜாத'' என்று புருஷசூக்தம் கூறுகிறது. மற்றும் ஓர் வரலாறு திருமாலின் மார்பிலிருந்து பிரம்மா தோன்றினார். பிரம்மாவின் மகள் அத்ரி, அத்ரியின் மகன் சந்திரன், ''ஆத்ரேய கோத்ராத்மஜாய நம.'' என்று சந்திரனைப் பற்றிய அஷ்டோத்ரம் கூறுகிறது. பாற்கடலில் மகாலட்சுமிக்கு முன்னால் சந்திரன் பிறந்தி

னாலேயே நவக்கிரக ஸ்தோத்திரம் சந்திரனை குறித்து, ''ஷிரோ தார்ணவ சம்பவம்'', - அதாவது பாற்கடலைக் கடைந்தபோது உதித்தவன் என்று கூறுகிறது.

*தலச் சிறப்பு:* பங்குனி உத்திரத்தன்று காலை உதயாதி 6.00 மணிக்கு சூரிய ஒளி சிவலிங்கத்தின் மேல் பிரவேசிப்பதால் அன்று சூரிய பூஜையும், மறு தினம் (பௌர்ணமி) பிரதமையில் மாலை 6.00 மணிக்கு சந்திர ஒளி சிவலிங்கத்தின் மேல் பிரவேசிப் பதால் அன்று சந்திரபூஜையும் நடைபெறும். சந்திர பகவானுக்குத் தனி சன்னதி உண்டு. திங்களூரில் நாகம் தீண்டினால் விஷம் பாம்பு தீண்டப்பட்டவர் களுக்கு ஏறாது என்பது தனிச்சிறப்பு. தோஷமுள்ள வர்கள் அபிஷேகம், அர்ச்சனை, நெய்விளக்கு ஏற்றி சந்திரபகவானை வழிபட்டுப் பேறுபெறலாம்.

**தோஷ நிவர்த்தி:** சந்திரபுஷ்கரணி தீர்த்தத்தில் நீராடி சந்திரனுக்குரிய மலர் வெள்ளரளி, தானியம் பச்சை அரிசி, பொங்கல் அல்லது (பச்சரிசியில் வெல்லம் மட்டும் கலந்தவை) காப்பரிசியாக செய்து மூலவர் சிவபெருமானுக்கு வெள்ளை நிற வஸ்தி ரமும் அணிவித்து, நவரத்தினங்களில் ஒன்றான முத்து பதித்த ஆபரணமாகவோ, அல்லது நவஉலோகங் களில் ஒன்றான வெள்ளி ஈயக்காப்பாகவோ விரல் மோதிரமாக நகைசெய்து சுவாமிக்கு நெய்வேத்திய தீபாராதனைகள் செய்வித்து, சந்திரதோஷம் உள்ள வர்கள் பிரசாதத்தை உண்டு, அணிகலன்களை அணியலாம். ஜாதகத்தில் சந்திரதோஷ காலம்வரை விரதங்கள் இருந்து தோஷத்தை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

**திருக்கோயில் முகவரி:**

செயல் அலுவலர்,
அருள்மிகு கைலாசநாத சுவாமி திருக்கோயில்,
திருப்பழனம் அஞ்சல், திங்களூர் - 613 204
திருவையாறு வட்டம், தஞ்சை மாவட்டம்.

## அருள்மிகு வைத்தீஸ்வரன் திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில் (புள்ளிருக்கு வேளூர்) (செவ்வாய் ஸ்தலம்)

**அமைவிடம்:** மயிலாடுதுறை - சீர்காழி வழித்தடத் தில் உள்ளது.

**தலப்பெயர்கள் :** புள் (ஜடாயு), இருக்கு (இருக்கு வேதம்), வேள் (முருகன்), ஊர் (சூரியன்) என்ற



நால்வரும் பூசித்தமையால் புள்ளிருக்கு வேளூர் எனவும், சடாயு பூசித்தமையால் சடாயுபுரி எனவும், வேதம் பூசித்தமையால் வேதபுரி எனவும், கந்தன் பூசித்தமையால் கந்தபுரி எனவும், சூரியன் பூசித்தமை யால் பரிதிபுரி எனவும், அங்காரகன் பூசித்தமையால் அங்காரகபுரம் எனவும், அம்பிகை பூசித்தமையால் அம்பிகாபுரம் எனவும் பல பெயர்கள் உள்ளன. இவை யன்றி வினை தீர்த்தான் கோயில், தையல் நாயகி கோயில், வைத்தீஸ்வரன் கோயில் முதலான பற்பல பெயர்களும் இத்தலத்திற்கு வழங்குகின்றன.

**இறைவன்:** அருள்மிகு வைத்தியநாத சுவாமி

**இறைவி:** அருள்மிகு தையல்நாயகி


**ஸ்தலவிருட்சம் :** வேம்பு

**தீர்த்தம் :** சித்தாமிர்த தீர்த்தம், கோதண்ட தீர்த்தம், கௌதம தீர்த்தம், வில்வதீர்த்தம், முனிவர் தீர்த்தம், அங்கசந்தான தீர்த்தம்.

**பாடியவர்கள் :** திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், அருணகிரி நாதர், குமரகுருபரர், இராமலிங்கசுவாமி கள், காளமேகப் புலவர்.

திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனத்தின் கீழ் இத்திருக்கோயிலின் நிர்வாகம் உள்ளது.

**பிரசாத பலன் :** நேத்திர பிடிசந்தனம் அணிபவர் களுக்குத் தேவையான பலன்களைக் கொடுக்க




வல்லது. சடாயு குண்டத்தில் உள்ள நீற்றினை (விபூதி) இட்டு கொண்டவர்கள் பலரும் பலவிதமான பிணிகள் நீங்கப் பெறுகின்றனர். திருசாத்துருண்டை உட்கொண்டு, சித்தாமிர்தத் தீர்த்தத்தைப் பருகி வருபவர்கள் வினைகளெல்லாம் தீர்ந்து முத்தியின் பலனை அடைவார்கள்.

**வழிபட்டோர்:** சடாயு, வேதம், முருகன், ஆதித்தன், அங்காரகன், பிரமன், சதானந்தர், இராமர், கலைமகள், பூமகள், துர்க்கை, சிவசன்மன், துருவாசன், பராசரர் முதலியோர் வழிபட்டுப் பலபேறுகளைப் பெற்றுள்ளார்கள்.

**தலப்பெருமை :** முருகன், சூரன் மார்பைப் பிளக்க வேல் வாங்கியது இத்தலத்திலே. தன்னிடத்து வசிக்கும் உயிர்கள் இயமலோகம் அடையப்பெறாததும், பிடித்த பேய்கள் ஓடப்பெறுவதும், இறைவன் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளையும் தீர்க்க திருவுளங்கொண்டு தையல்நாயகியம்மையார் தைல பாத்திரமும், சஞ்சீவியும் வில்வமரத்து அடிமண்ணும் எடுத்துக்கொண்டு தம்முடன் வர, வந்து வைத்தியராகி அருள் செய்திருக்கப் பெற்றதும், அறுசுவையோடு கூடிய உணவை அடியார்களுக்கு உண்பித்து மாகேசுவர பூசை செய்யப் பெறுவதும், பிறந்தாலும், இறந்தாலும், போக மோட்சங்களைக் கொடுப்பதுமாகிய பெருமையினையுடையது இத்தலம்.

**செவ்வாய்:** செவ்வாய்க்கு ஒரு சமயம் சரும நோய் பிடித்தது. அந்நோயால் வாடிய செவ்வாய் இங்குள்ள சித்தாமிர்தத் தீர்த்தத்தில் நீராடி ஒரு மண்டலம் (48 தினங்கள்) வைத்தியநாத சுவாமியை வழிபட்டு நோயிலிருந்து நிவிருத்தியாகி சுயரூபம் பெற்று ஆரோக்யத்துடன் வழிபட்டான். எனவே இது அங்காரக சேஷத்திரம் என்று பெயர் பெற்றது.

**செவ்வாய் கிரகசாந்தி:** செவ்வாய் திசை 7 வருடம்; நிலம் பெற, கடன் உபாதை நீங்க, மூட்டு வலி குணமாக, ஜாதகத்தில் 4, 7, 8, 12 செவ்வாய் இருக்க தோஷமேற்பட்டு திருமணத்தடை ஏற்படவும். விபத்து, அடிக்கடி காயம், ரணம், கட்டி ஏற்படக் காரணமானவர். இதற்கு முருகனை வழிபட்டாலும், பவழம் தரித்தாலும், சிவப்பு நிற காளைமாடு தானம் செய்தாலும், சிவப்பு ஆடை தரித்தாலும், துவரை, செப்புப்பாத்திரம், பவழம் முதலியவற்றை தானம் செய்தாலும் கார்த்திகை அல்லது செவ்வாய்கிழமை விரதம் இருந்தாலும், அங்காரகனுக்கு அர்ச்சனை செய்தாலும், தோஷம் நீங்கும். செவ்வாய்க்கு முருகனே அதி தெய்வம், செவ்வாய்க்கு செய்யும் வழிபாடு முருகனுக்கு உகந்ததே. செவ்வாய்தோறும் மேஷ வாகனத்தில் (ஆடு அங்காரகன் பிரகார உற்சவம் நடைபெறும்.)

**திருக்கோயில் முகவரி:**

தலைமைக் கண்காணிப்பாளர்
அருள்மிகு வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம்,
வைத்தீஸ்வரன் கோயில் (அஞ்சல்)
சீர்காழி வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்
தொலைபேசி: 04364 - 279423

★ ★ ★

# ''வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்''

- டாக்டர் த. அமிர்தலிங்கம்

''பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்''

என்று அண்மைக் காலத்தில் வாழ்ந்தவரான அமர கவி பாரதியார் நமக்கு அறிவுறுத்தினார்.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்''.

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே பாடினார் பொய்யாமொழிப் புலவர் வள்ளுவனார். இச் சான்றோர்கள் வாக்கிற்கிணங்க சிறந்து விளங்கிய ஒரு நாயனார்தான் ''வெல்லுமா மிக வல்ல மெய்ப் பொருளுக்கடியேன்'' என்று சுந்தரரால் போற்றப் பட்ட மெய்ப்பொருள் நாயனார்.

சிவ வேடத்திற்குச் சிறப்பு தந்து சிவனடியார்க ளைப் போற்றி வளர்க்க வேண்டும் என்ற இலட்சியத் திற்காகத் தம் இன்னுயிரையே தந்து தம் அருள் உள்ளத்தால் தம்மைக் கொன்றவரையும் கைதொழுது வென்றவரான இந்நாயனாரின் சரிதம் வேதத்தினும் விழுமிய சரிதமாகும். பழிக்குப்பழி இரத்தத்திற்கு ரத்தம் என்று வன்முறைகளால் சீரழிந்துவரும் இன்றைய சமுதாயத்திற்கு அருள் நெறியின் மகத் துவத்தைப் போதிக்கும் இச்சான்றோரின் வரலாறு சிறந்த நன் மருந்தாகத் திகழும் என்பது திண்ணம்.

திருக்கோவலூர் சிவபெருமானின் அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. சி பெருமான் அந்தகாசூரனை வென்று இத்திருக் கோவலூர் திருத்தலத்திலேயே ஆகும். திருஞான ம்பந்தரும் திருநாவுக்கரசரும் இத் தலத்தைப் பாடியுள்ளனர். இத்தகைய தொன்மைச் சிறப்பு மிக்க திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்ட சேதிநாட்டை மலாடர் கோமான் ஆகிய மெய்ப்பொருள் நாயனார் ஆண்டுவந்தார். இவ ருடைய பரம்பரையே மாதொரு பாகராம் சிவபெரு மானுக்கு வழிவழி அன்பு செய்து வந்த சைவப் பரம் பரையாகும். மெய்ப்பொருள் நாயனார் சிவனடி யார்களிடத்தில் அன்புபூண்டு அவர்கள் கருத்தின்வழி ஏவல் செய்வதையே பெரும் பாக்கியமாகக் கருதித் தொண்டாற்றி வந்தவர் ஆவார்.

மெய்ப்பொருள் நாயனார் அறநெறி வழாமல் தம் அரசைப் பாதுகாத்து வந்தார். தம்முடைய தோளாற்ற லால் பகைவர்கள் பலரையும் அவர் வெற்றி கண்டுள் ளார். நீதி நேர்மை மிக்க அவர் எப்பொழுதும் வந்தித்து இருப்பது சிவன் திருப்பாதம். எப்பொழு துமே சிந்தித்திருப்பது சிவனடியார்க்கு ஆற்றிடும் திருத்தொண்டு.

தம்முடைய செல்வம் அனைத்தையும் சிவனார் ஆலயப் பூசைக்கும், சிவனடியார் பாத சேவைக் குமே அவர் செலவழித்துவந்தார். இத்தகைய மெய்ப் பொருள் நாயனாரின் மெய்யான சிவத்தொண்டைச் சேக்கிழார் பாராட்டிப் போற்றுகிறார்.

''மங்கையைப் பாக மாக
உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி
ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப்
போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள் நாயகருக்கு அன்பர்
தாளலால் சார்பொன் றில்லார்''

''தேடிய மாடு நீடு
செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்
காவன ஆகும் என்று
நாடிய மனத்தினோடு
நாயன்மார் அணைந்தபோது
கூடிய மகிழ்ச்சி பொங்கக்
குறைவறக் கொடுத்து வந்தார்''

எனவரும் பாடல்களில் மெய்ப்பொருள் நாயனாரின்

சிவத் தொண்டினைச் செம்மையுற விளக்கியுள்ளார் சேக்கிழார்.

சிவவேடம் பூண்ட சிவனடியாரைச் சாதாரண அடியாராக எண்ணாது அவர்களையும் நாயனாராகவே மதித்து வணங்கி அவர்களுக்கு வேண்டுவன எல்லாம் வழங்கி உவந்தது மெய்ப்பொருள் நாயனாரின் உள்ளம். ஆகவேதான் மேல் காட்டிய பாடலில் அடியார்களை அடியார் எனச் சுட்டாமல் சேக்கிழார் ''நாயன்மார் அணைந்தபோது'' என்று மெய்ப்பொருள் நாயனாரின் உள்ளம் எவ்வாறு உணர்ந்ததோ அவ்வாறே ''நாயன்மார் அணைந்த போது'' என்று சுட்டிக் ''கொடுத்து வந்தார்'' ''கொடுத்து உவந்தார்'' எனவும் பொருள் கொள்ளத்தக்க வகையில் சொற்களைப் பெய்து கவிகளை வடித்திருக்கக் காண்கிறோம்.

இத்தகைய உத்தமராம் மெய்ப்பொருள் நாயனாருக்கு ஒரு பகைவன் வாய்த்திருந்தான். அவன் பொய்ப்பொருளை நாடும் பித்தன்; மெய்ப்பொருளாரின் மெய்ப்புகழைக் காணச் சகியாத எத்தன்; அவனும் திருக்கோவலூருக்கு அருகிருந்த ஓர் ஊரை குதிரை, யானை, காலாள் படைகளோடு ஆண்டிருந்த ஒரு கொற்றவன்தான். அக்கொற்றவன் மெய்ப்பொருள் நாயனார் மீது பலமுறை படை திரட்டி வந்து போர்புரிந்திருக்கிறான். ஆனால் சிவனடியார்கள் பால் ஈரமும், மாற்றார்களை வெல்லும் மாவீரமும் கொண்டிருந்த மெய்ப்பொருளாரை வெற்றி கொள்ள அவனால் இயலவில்லை. பலமுறையும் வரைநெடுந்தோள்கள் கொண்ட மெய்ப்பொருளாரிடம் அவன் தோற்று அவமானப்பட்டு ஓடிப் போய்விட்டான். இப்படி வீரத்தால் மெய்ப்பொருளாரை வெற்றி கொள்ள முடியாத முத்தநாதன் என்ற அந்த வஞ்சகன், சிவனடியார்களுக்கு மெய்ப்பொருளார் அளிக்கும் மரியாதையைப் பயன்படுத்திப் படைகொண்டு சாதிக்க முடியாததை சிவனடியாரின் உடை பூண்டு சாதித்து விட சதித்திட்டம் ஒன்றைத் தன் மனதிற்குள் தீட்டிக் கொண்டான்.

திருவெண்ணீறு சாத்தும் சிவனடியார் வேடம் பெருமைகள் யாவும் சேர்க்கும் பெருவேடமாகும். அப்பெருவேடத்தைச் சிறுமதியாளனாகிய முத்தநாதன் பூண்டு கொண்டுவிட்டான்.

*''மெய்யெல்லாம் நீறு பூசி*
*வேணிகள் முடிந்து கட்டிக்*
*கையினுள் படைகரந்த*
*புத்தகக் கவுளி ஏந்தி*
*மைபொதி விளக்கே என்ன*
*மனத்தினுள் கறுப்பு வைத்துப்*
*பொய்தவ வேடம் கொண்டு*
*புகுந்தனன் முத்த நாதன்''*

என்று முத்தநாதன் பொய்தவ வேடம் பூண்டமையைச் சேக்கிழார் பாடுகின்றார்.

திருநீறு அணியாத நெற்றி பாழ் என்பது பழமொழி. உண்மை அன்புடன் அணிவாரின் ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்களையும் சுட்டு நீறுபடுத்துவதால் திருநீற்றிற்கு அப்பெயர் வந்தது.

*''கங்காளன பூசும் கவசத் திருநீற்றை*
*மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்*
*தங்கா வினைகளும், சாரும் சிவகதி*
*சிங்கார மான திருவடி சேர்வரே''.*

என்று திருநீறு அணிவதனால் உண்டாகும் பலன்களைத் திருமூலர் கூறியுள்ளார். வினைகளை நீறு படுத்துவதாகிய திருநீற்றை உடலில் பதினாறு அல்லது பன்னிரண்டு இடங்களில் மூன்று கீற்று வடிவமாகவேனும் (திருபுண்டரிகம்) அல்லது பரவவேனும் (உத்தூளனம்) பூச வேண்டும் என்பது விதி. வினைகளைப் போக்கவல்ல திருநீற்றினையே முத்தநாதன் மெய்யெலாம் பரவப் பூசிக் கொண்டுவிட்டான். அவ்வாறு பூசிய அளவிலேனும் அவனுடைய உள்ள மாசு நீங்கியதா எனில் நீங்கிடவில்லை. நஞ்சே வடிவமான முத்த நாதனின் மனத்தைப் பக்குவம் செய்திட இன்னும் அவன் பலகாலும் திருநீறு பூசியாகவேண்டும்.

தீபத்தை ஏற்றும்போது அத்தீபச் சுடர் அறை முழுதும் உள்ள இருளை அகற்றினாலும்கூட, தான் எரியும் திரியின் கீழுள்ள இருளை அகற்ற அதனால் ஆவதில்லை அல்லவா! அவ்வாறே முத்தநாதன் பூசிக்கொண்ட திருநீறும், கட்டி முடிந்து கொண்ட சடாமுடியும் காண்பார் மனமாசைப் போக்குவன போல் சுடர் கொண்டு திகழ்ந்திட்ட போதும், அவன் கொண்ட வேடம் அவனுடைய மன அழுக்கை அகற்றவில்லை; எதைப்போல என்றால் ''மைபொதி விளக்கு போல்'' என்று உவமை கூறுகிறார் சேக்கிழார். மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்லும் தீய எண்ணத்தோடு ஆயுதம் மறைத்து வைத்திருக்கும் புத்தகத்தைக் கையினில் ஏந்தியவனாகப் பொய்யான தவ வேடம் பூண்டுத் திருக்கோவலூருக்குள்ளே புகுந்து விடுகிறான் முத்தநாதன்.

சிவனடியார் எந்நேரமும் தம்மைக்காணத் தடையின்றி வருமாறு ஆணை பிறப்பத்திருந்தார் மெய்ப்பொருள் நாயனார். ஆகவேதான் பொய் தவ வேடம் பூண்ட முத்தநாதனும் தடையின்றித் திருக்கோவலூர் நுழையவும், எங்கும் தடையின்றி அரண்மனைக்குள் நுழையவும் அதற்குப் பிறகு அரசன் உறங்கிக் கொண்டிருக்கும் அந்தப்புரத்திற்கே வரவும் எளிதாக அவனுக்கு முடிகிறது. சிவனடியார்களைச் சிவபெருமானாகவே மதித்தார் மெய்ப்பொருள் நாயனார். ஆகவேதான் முத்தநாதன் சிவ வேடம் பூண்டுவர அவனையும் கூட ''உடையவர்தாமே வந்தார்; உள்ளெழுந்தருளும்'' என்று தடையின்றி அரண்மனைக்குள் நுழைய அனுமதித்து விடுகிறார்கள் காவலர்கள்.

மெய்ப்பொருள் நாயனாரின் அந்தப்புரத்தைக் காவல் செய்து நிற்பவன் தத்தன். இவன் மெய்ப்பொருள் நாயனாரின் குறிப்பறிந்து செயல்படக் கூடிய மெய்க்காவலன் ஆவான். குறிப்பில் யாரையும் உணரக்கூடிய தத்தன், தவவேடம் பூண்டு வந்திருக்கும் முத்தநாதனையும் கூட அவன் முகக் குறிப்பிலிருந்தே ஐயத்திற்கிடமானவனாகத் தெரிந்து கொண்டு விடுகிறான். ஆகவே அவனைத் தடுத்து ''அரசர் உறங்கக் கூடும், சமயம் பார்த்துச் செல்ல வேண்டும்'' என்று கூறுகிறான். இவ்வாறு தத்தன் தடுத்தும் கேளாத முத்தநாதன் ''நான் அரசருக்கு மெய்ப்பொருளை உரைக்கச் செல்கிறேன். நீ தடுக்காமல் இங்கேயே நில்'' என்பதாகத் தத்தனைத் தள்ளிக்கொண்டு அந்தப்புரத்துக்குள்ளும் நுழைந்துவிடுகிறான்.

முத்தநாதன் நுழையும்போது மெய்ப்பொருள் நாயனார் கட்டிலில் கண்மூடியவாறு இருக்க, அவர் அருகிலேயே அரசியாரும் அமர்ந்து பாதசேவை புரிந்துகொண்டு இருக்கிறார். சிவனடியாரைக் கண்டவுடன் அரசியார் வேகமாகக் கட்டிலை விட்டுக் கீழிறங்கி, அரசரையும் எழுப்புகிறார். அந்தப்புரத்திற்குள் நுழைந்த சிவனடியாரைக் கண்டதும் கதுமென அரசியார் கட்டிலில் இருந்து எழுவதும், அடியாரை யார் எவர் என விசாரியாமலே அரசரை எழுப்புவதும், மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார்களுக்குத் தந்திருக்கும் பெரு மதிப்பினையே நமக்குப் புலப்படுத்துகின்றன. கணவனார் கருத்தறிந்து செயற்படும் கற்புக்கரசியான தேவியாரின் குணச் சிறப்பையும் கூட இந்நிகழ்ச்சியால் அறிகிறோம்.

அரசியார் எழுப்ப எழும் மெய்ப்பொருள் நாயனார் சிவனடியாரைக் கண்டதும் மகிழ்ச்சி மிகக் கொண்டவராய் ''அண்டர் நாயகனார் தொண்டராம்'' என உரைத்தவாறு தமது செங்கைகளைக் குவித்து வணங்கி வழிபடுகிறார்.

*''மங்கலம் பெருக மற்றென் வாழ்வு வந்தணைந்த*
*தென்ன இங்கெழுந் தருளப் பெற்ற தென்*
*கொலோ''*

என்று கூறியும் வரவேற்கிறார் மெய்ப்பொருள் நாயனார். ''என் வாழ்வில் மங்கலம் மேலும் வந்து கூடிற்று'' என்று மெய்ப்பொருள் நாயனார் கூறி முத்தநாதனை வரவேற்கிறார். முத்தநாதனால் அவருடைய மங்கலம் மிக்க வாழ்வு முடியவே போகிறது அல்லவா! அதனாலே சேக்கிழார், மெய்ப்பொருள் நாயனாரின் வாழ்வு முடியப்போகிறது என்பதையும் நமக்குக் குறிப்பில் உணர்த்துவதற்காக ''வாழ்வு வந்து அணைந்தது'' (நீங்கியது) எனப்பொருள் கொள்ளும் வகையில் பாடியிருக்கும் நயமும் இங்கே நாம் உணர்தற்குரியது.

இப்படி மெய்ப்பொருள் நாயனார் அகம் மகிழ்ந்து வரவேற்க தவவேடத்தில் இருந்த முத்தநாதன் ''உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகம நூல் மண்மேல் எங்கும் இல்லாததொன்று கொண்டு வந்தேன், இயம்ப'' என்று கூறுகிறான். சிவபெருமான் மெய்ப்பொருள் நாயனார்க்கே உரிய நாயகன்; போலி வேடம் பூண்டிருக்கும் தனக்கு நாயகன் இல்லை என்பதாலே ''உங்கள் நாயகனார்'' என்று முத்தநாதன் உரைக்கக் காண்கிறோம். எங்கள் நாயகனார் என்று அவன் கூறாமல் ''உங்கள் நாயகனார்'' என்று உரைத்தமையால் அவனுடைய வேடத்தில் தான் சிவம் இருந்ததே தவிர அவனுடைய உள்ளத்தில் இல்லை என்பதை அவனே ஒப்புக் கொண்டு உரைத்து விடுவதையும் காண்கிறோம். ஆனாலும் மெய்ப்பொருள் நாயனார் முத்தநாதனின் வேடத்தில் எப்படி ஐயம் கொள்ளவில்லையோ, அப்படியே அவனுடைய வார்த்தையிலும் கூட ஐயம் ஒன்றும் கொள்ளாமல் ''நாயகனார் உரைத்த ஆகம நூலின் பொருளை எனக்கு அறிவிக்க வந்தீர்களா? இதைக் காட்டிலும் எனக்கு வேறு பேறு என்ன இருக்க முடியும்? இப்பொழுதே எனக்கு எம்பிரான் அருள் செய்த ஆகமத்தை வாசித்து அருள் செய்ய வேண்டும்'' என்று பணிந்து வேண்டுகிறார். அதற்கு பொய்த் தவ வேடம் பூண்டவனான வஞ்சநாதன்

*''நாறுபூங் கோதை மாது தவிரவே நானும் நீயும்*
*வேறிடத் திருக்க வேண்டும்.''*

என்று கூறுகிறான். அரசி அவ்விடத்தைவிட்டு அகல வேண்டும் என்பதையே முத்தநாதன் இத்தொடரால் கூறியிருக்கிறான். சேக்கிழார் தம் புலமைத்திறத்தால் ''வாசனை மிக்க மலர்களை இனி அரசி அணிந்து கொள்வது தவறப்போகிறது. நானும் உன்னைக்

கொன்று நரகமாகிய ஓரிடத்தை அடைந்து விடுவேன். சிவலோகமாகிய வேறிடத்திற்கு நீரும் சென்றுவிடப் போகிறீர்'' என்று மெய்ப்பொருள் நாயனாரிடம் உரைப்பதைப்போல இருபொருள் படுமாறு இத் தொடரை அமைத்திருக்கும் நயமும் இங்கே எண்ணி மகிழ்தற்குரியது.

முத்தநாதன் வேண்டிக் கொண்டபடியே, திருமகளை ஒத்த அரசியாரை அகலுமாறு மெய்ப் பொருள் நாயனாரும் கூற, கணவன் சொல்லுக்கு மாறுகூறி அறியாத அரசியும் உடன் அவ்விடத்தை விட்டு அகன்று விடுகிறார். முத்தநாதனை உரிய ஆசனம் தந்து அமரச் செய்யும் மெய்ப்பொருள் நாயனார், தாம் தரைமேல் அமர்ந்தவராய் ''இனி யருள் செய்யுங்கள்'' என்று வேண்டுகிறார். உடனே முத்தநாதனும் புத்தகத்தைத் திறப்பதை போலத் திறந்து அதற்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் படைக்கருவியை எடுத்து வணங்கி நின்றிருக்கும் மெய்ப்பொருள் நாயனார் வயிற்றில் அதனைப் பாய்ச்ச, அப்பொழுதும் மெய்ப்பொருள் நாயனார் ''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்'' என்று சிவனடியாரை வணங்கித் தொழுகிறார்.

*''கைத்தலத் திருந்த வஞ்சக் கவுளிகை மடிமேல் வைத்துப்*
*புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்*
*பத்திரம் வாங்கித் தான்முன் நினைத்த அப்பரிசே செய்ய*
*மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது வென்றார்''*

என்கிறார் சேக்கிழார். முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்ல விழைந்து ஊருக்குள் நுழைந்த போது அவனுடைய தீய நோக்கத்தைக் கூற முற் பட்டபோதும் ''இகலினால் வெல்ல மாட்டான் அற்றத்தில் வெல்வான் ஆக'' என்று அமங்கலச் சொற்பெய்தலின்றிச் சேக்கிழார் அவன் நோக்கத்தைச் சுட்டடினார். முத்தநாதன் மெய்ப்பொருள் நாய னாரைக் குத்திவிட்டதைக் கூறும் இப்போதும் ''தான் முன் நினைத்த அப்பரிசே செய்ய'' என்று அமங்கலச் சொல் இன்றிச் சுட்டியிருக்கும் சிறப்பு எண்ணி எண்ணிப் போற்றுதலுக்குரியதாகும். மேலும் மெய்ப் பொருள் நாயனார் முத்தநாதனுக்குத் தோற்றிட வில்லை, அவனுக்குத் தம் இன்னுயிரைக் கொடுத்து வென்றுவிட்டார். மடிந்து விழுந்தபோதும் ''சிவ னடியாரா என்னைக் கொன்றது?'' என்று சிவனடி யாரை மனதாலும் நொந்துகொண்டு விடாமல் ''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என்று தொழுது வென்றார்'' என்று பாடியிருப்பதைக் காணும்போது அவர் தம் பண்பின் உயர்வைக் கண்டு நாமும் பூரிக் கிறோம்.

முத்தநாதன் அந்தப்புரத்திற்குள் நுழையும் போதே தத்தன் என்ற மெய்க்காப்பாளன் ஐயம் கொண்டான் என்பதைப் பார்த்தோம். அவன், சிவனடி யார் உள்ளே நுழைந்தபிறகும் சிவனடியாரால் அரசருக்கு ஆபத்து ஏதேனும் உண்டாகுமோ என்று சந்தேகத்துடனேயே இருந்திருக்கிறான். தான் கொண்ட ஐயத்திற்கு இணங்கவே சிவனடியார் மறைத்திருந்த கொலைக் கருவியை எடுத்து முடிக்கக் காணும் தத்தன், தன் உடைவாளை ஓங்கியவாறு முத்தநாதனை வெட்ட ஓடிவருகிறான். அப்பொழுது இரத்தம் சோர தரைமேல் வீழ்கின்ற மெய்ப்பொருள் நாயனார் 'தத்தாநமர்'' (தத்தா! இவர் நம்மவர் என்பது பொருள்) என அவனைத் தடுத்துத் தரையில் வீழ்கிறார்.

*''மறைத்துஅவன் புகுந்த போதே*
*மனம் அங்கு வைத்த தத்தன்*
*இறைப் பொழு தின்கட்கூடி*
*வாளினால் எறிய லுற்றான்*
*நிறைத்த செங்குருதி சோர*
*வீழ்கின்றார் நீண்ட கையால்*
*தறைப்படும் அளவில் ''தத்தா*
*நமர்'' எனத் தடுத்து வீழ்ந்தார்''*

முத்தநாதன் வயிற்றில் வாளைப் பாய்ச்சியது கூட மெய்ப்பொருள் நாயனாரை மனம் நோகச் செய்ய வில்லையாம். தன்னை நாடிவந்திருக்கும் சிவனடி யாரை வெட்ட வாளோங்கிய தத்தன் செயல்தான் மெய்ப்பொருள் நாயனாரை மிகுந்த மன வேதனைக் குள்ளாக்கியது என்பதைக் குறிப்பிடுகிறார் சேக்கிழார்.

*''வேதனை எய்தி வீழ்ந்த*
*வேந்தரால் விலக்கப் பட்ட*
*தாதனாம் தத்தன் தானும்*
*தலையினால் வணங்கித் தாங்கி*
*யாதுநான் செய்கேன் என்ன*
*எம்பிரான் அடியார் போக*
*மீதிடை விலக்கா வண்ணம்*
*கொண்டுபோய் விடுநீ என்றார்''*

என்பது சேக்கிழார் காட்டும் அடுத்த பாடல். முத்த நாதனை வெட்டப் போன தன் செயல் அரசரை மிகுதியும் மனவருத்தத்திற்கு ஆளாக்கி விட்டது என்பதையும் தத்தன் புரிந்து கொண்டு விடுகிறான். ஆகவேதான் மீளவும் முத்தநாதனை வெட்ட வாளினை

அவன் ஓங்கிடாமல் தரையில் வீழப்போகும் மெய்ப் பொருள் நாயனாரைத் தான் தாங்கி ''இப்பொழுது நான் என்ன செய்வது?'' என்று அரசரை வினவுகிறான். மெய்ப்பொருளாரும் ''சிவபெருமானின் அடியார் எந்தத் தீங்கும் இன்றி பத்திரமாக வெளியேறும் வண்ணம் நீயே கொண்டுபோய் விட்டுவா'' என்று தத்தனுக்கு ஆணையிட, பொய்தவ வேடதாரியான முத்தநாதனுக்குக் காவலாகத் தத்தனே உடன் போகிறான்.


இதற்குள் மெய்ப்பொருள் நாயனார் போலி சிவனடியார் ஒருவரால் குத்தப்பட்ட செய்தி நகரில் வேகமாகப் பரவ அரசரைக் குத்திய முத்தநாதனைக் கொல்ல ஏராளமான மக்களும் படையினரும் திரண்டு வருகிறார்கள். ஆனால் தத்தனோ ''இவன் பத்திர மாகச் செல்லவேண்டும் என்பது அரசரின் கட்டளை'' என்று கூற, முத்தநாதனைத் தண்டிக்காமல் எல்லோரும் அவனை அரசன் விரும்பியவாறே பத்திரமாக நாட்டை விட்டு வெளியேற அனுமதித்து அரசன் ஆணைக்கு அஞ்சி ஒதுங்கிச் சென்று விடுகின்றனர்.

தத்தன் அரண்மனை திரும்பும் வரையில் மெய்ப் பொருள் நாயனாரும் தம் உயிரைத் தாங்கியவாறு காத்து இருக்கிறார். சிவனடியார் பத்திரமாகச் சென்றார் என்பதைக் கேட்க வேண்டி சோர்கின்ற ஆவி தாங்கும் கொற்றவன் முன்பு, கோமகன் குறிப் பில் நிற்கும் தத்தன் சென்றான் என்று கூறுகிறார் சேக்கிழார். பத்திரமாகச் சிவனடியார் சென்று விட்டார் என்பதைத் தத்தன் கூற மெய்ப்பொருள் நாயனார் எவ்வாறு மகிழ்ச்சி கொண்டார் என்பதை யும் சேக்கிழார்

''சென்றடி வணங்கி நின்று
செய்தவ வேடம் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி
விட்டனன் என்று கூற
இன்றெனக்கு ஐயன் செய்தது
யார் செய்ய வல்லார் என்று
நின்றவன் தன்னை நோக்கி
நிறை பெருங் கருணை கூர்ந்தார்''

என்று பாடியிருக்கிறார்.

யாரோ ஒருவர் சிவனடியார் வேடம் பூண்டு தமக்கு இன்னல் செய்துவிட்டார் என்பதனால் பெருமை மிக்க சிவவேடத்தைச் சிறுமைப்படுத்தும் சிறிய செயலை மெய்ப்பொருள் நாயனார் செய்திட விரும்பவில்லை. மேலும் சிவபெருமானின் திருவருள் விருப்பத்தினால்தான் சிவனடியார் ஒருவரால் தம்முயிர் நீங்கப்பெறும் இச்செயலும் நிகழ வேண்டும் என்பதும் மெய்ப்பொருள் நாயனாரின் அசைக்க முடியாத நம்பிக்கை. பொன் பொருளை விரும்பும் அடியார்களுக்கு எவ்வாறு அவற்றை உவப்போடு வழங்க மெய்ப்பொருள் நாயனார் சித்தமாய் இருந்தாரோ அவ்வாறே தன்னுடல் உயிரையும்கூட சிவனடியார்க்கே உவப்போடு வழங்க அவர் சித்த மாகவே இருந்தார். தம்முயிரை வேண்டி அதனைப் பெறுவதற்காகவேனும் முத்தநாதன் சிவவேடம் பூண்டானே என்று மகிழ்ச்சியே கொண்டது மெய்ப் பொருள் நாயனாரின் உள்ளம். ''மந்திரமாவது நீறு'' என்ற ஆன்றோர்களின் வாக்கிற்கிணங்க முத்த நாதன் உயிரைக் காக்கும் மந்திரமாக அவன் பூசிய நீறும், அவன் பூண்ட வேடமும் காவல் ஆக வேண்டும், ஆகவே அவன் பத்திரமாக உயிர் பிழைத்துச் சென்று, தன்னுயிரைக் காப்பாற்றிய சிவவேடத்தின் பெருமையை எண்ணி எண்ணி உருக வேண்டும், என்றென்றும் முத்தநாதனும் கூட சிவவேடத்தின் பெருமையை உணர்ந்து அதனைப் பூண்டு இனி யேனும் அவன் திருந்தி வாழவேண்டும் என்பதற் காகவும் அவன் பத்திரமாக உயிர்பிழைத்துச் செல்ல வேண்டும் என்று மெய்ப்பொருள் நாயனார் விழைந் தார். ஒருவர் அல்லது ஓரிருவர் சிவவேடம் பூண்டு தவறு செய்வார்களேயானால் அதற்காக அவரைப் பழிப்பதும் தண்டிப்பதும் கூட சிவ வேடம் பூண்ட சிவநேய செல்வர்கள் எல்லோரையும் பழிப்பதும் தண்டிப்பதும் ஆகிவிடலாம். அதனால் சிவவேடம் தரித்து சிவநேயத்தை வளர்க்கும் சான்றோர்கள் சமுதா யத்தில் அருகி மறைந்து போய்விடலாம் என்றும் அஞ்சியது மெய்ப்பொருள் நாயனாரின் திருவுள்ளம், ஆகவேதான் முத்தநாதன் பூண்ட சிவவேடம் எல்லாக் காலத்திலும் பெருமையோடு போற்றப்பட வேண்டிய ஒன்று என்பதனையும் ஒரு சிலரின் தவற்றிற்காக மிகப் பெரிய சமுதாயத்தைத் தூய்மைப்படுத்த வல்ல சிவவேடத்தை - தவவேடத்தைப் பழிப்பிற்கு உள்ளாக்கி விடக்கூடாது என்ற கருத்தை உலகிற்கு உணர்த்திடும் பொருட்டாகவும்தான் மெய்ப்பொருள் நாயனார் சிவவேடம் பூண்ட முத்தநாதன் பத்திரமாகச் செல்லவேண்டும் என்று விரும்பினார். அவ்வாறே பத்திரமாக சென்றார் சிவனடியார் என்று தத்தன் கூறக் கேட்டதும் பரமானந்தம் அடையும் அவர் தத்தனை யும் ''ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்'' என்று கூறிப் போற்றுகிறார்.



திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயிலில் 18-2-2004 மகாசிவராத்திரியை முன்னிட்டு இலட்சதீபவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இணை ஆணையர் (திருப்பணி) திருமிகு ப. தனபால் எம்.ஏ. பிஎல்.; சென்னை இணை ஆணையாளர் திருமிகு ப. இராஜா பிஎஸ்.சி. பிஎல்., மற்றும் செயல் அலுவலர் எஸ். பாரதி ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

*''ஐயன் எனக்கருளியவாறு ஆர்செய்வார்*
*அச்சாவோ''*

என்பது திருவாசகத் தொடர். ஐயன் என்று மாணிக்க வாசகர் ஈசனை உவந்துரைப்பதைப் போலவே மெய்ப்பொருளாரும் தத்தனைப் போற்றியிருப்பது காண்க.

தம்மைச் சூழ நின்றிருக்கும் தம் சுற்றத்தார் அரசியல் ஆயத்தார் அனைவருக்கும் **''விதியினாலே பரவிய திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீர்''** என்று மெய்ப்பொருள் நாயனார் அதற்குப் பிறகு அறிவுரை கூறுகிறார். ''முறைப்படி திருநீற்றுச் சிறப்புணர்ந்து அதனைப் பாதுகாத்து உய்யுங்கள்'' என்று மெய்ப் பொருள் நாயனார் கூறியதாகவும் இதற்குப் பொருள் கொள்ளலாம். ''யான் இறைவன் திருவடி இவ்விதம் சேரவேண்டும் என்பது இறைவன் இட்டிருக்கும் விதி. அதன் படியான் சேர்கிறேன். என்னை ஒப்ப நீங்களும் திருநீற்றுத்தவ வேடத்தை மதித்து வாழுங் கள்'' என்று நமக்கு அறிவுறுத்துவதாகவும் இத் தொடரின் பொருளை நாம் கொள்ளலாம்.

ஆகவே சேதி நாட்டு மன்னராக வாழ்ந்த மெய்ப் பொருள் நாயனார் உலக மக்களுக்கு வழங்கியுள்ள சேதியாவது **''விதியினாலே பரவிய திருநீற்று அன்பு பாதுகாத்து உய்ப்பீர்''** என்பதாகும். மெய்ப்பொருள் நாயனார் இச்சேதியை உலகிற்கு அருளி சிவபெரு மானின் அருட் காட்சியையும் அப்பொழுதே கண்டு மகிழ்ந்து, அவனருளால் அவன் தாள் நிழலே சேர்ந்து விடுகிறார். நாமும் மெய்ப்பொருள் நாயனார் காட்டிய வழியில் மெய்ப்பொருளை விழைந்து வாழ்ந்து ஈசனார் பொன்னார் திருவடிப் பேற்றினைப் பெற்று உய்வடைவோமாக.

★ ★ ★

# ஆனைக்கா அண்ணல்

- ஜி. வெங்கடேசன், எம்.ஈ., எம்.ஐ.ஈ.
செயற்பொறியாளர்,
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை

தமிழர் தம் இறைவழிபாடு இயற்கையோடு இணைந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவன ஐம்பூதத் திருத்தலங்களாகும். இப்பிரபஞ்சமானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் ஐந்து கலவைகளின் கூட்டே. காஞ்சி-அருள்மிகு ஏகாம்பரேசுவரர், நிலத்தலமாகவும், திருவனைக்காவிலுள்ள - அருள்மிகு சம்புகேஸ்வரர் நீர்த் தலமாகவும், திருவண்ணாமலையிலுள்ள அருள்மிகு அருணாசலேசுவரர், நெருப்புத் தலமாகவும், காளகஸ்தியிலுள்ள அருள்மிகு காளகஸ்தீசுவரர் காற்றுத்தலமாகவும், சிதம்பரத்திலுள்ள அருள்மிகு நடராசர் திருக்கோயில் ஆகாயத் தலமாகவும் விளங்கி வருகின்றன.

இப்பஞ்சபூத தலங்களுள் இரண்டாவது தலமாக விளங்குவது, திருவானைக்காவிலுள்ள அருள்மிகு சம்புகேஸ்வரர், அகிலாண்டேஸ்வரி திருத்தலம். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூவகைச் சிறப்புகளையும் பெற்றுள்ளது. இத்தலம் இன்றைக்குச் சுமார் ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றுச் சிறப்புடையதாகும். ஈங்குற்றிருக்கும் இறைவனை சமயக்குரவர்கள் நால்வரும், அருணகிரிநாதரும் பாடிப் பரவசமுற்று அருள் பெற்ற வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. இத்தலம் சிற்பங்களாலும், கல்வெட்டுகளாலும், இலக்கியங்களாலும், புராணங்களாலும், வரலாறுகளாலும் சிறப்புடைய தலமாக விளங்குகின்றது.

கங்கையிற் புனிதமாக தெற்கே காவிரியும், வடக்கே கொள்ளிடமுமாக அமைந்து இருக்கும் இவ்விரு நதிகளுக்கும் இடையில் அரங்கம் என்று சொல்லப்படுகின்ற ஆற்றிடைக் குறையில் உள்ள இரு கண்கள் போன்ற இரு தலங்களுள், கிழ்த்திசையில் சோலைகளுக்கு நடுவே ''திருவானைக்கா'' எனும் சிறந்த தலம் அமைந்துள்ளது; மேற்கே திருவரங்கமும் உள்ளது. இத்தலம் திருச்சி புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

### தலத்தின் வேறு பெயர்கள்:

திருவானைக்கா என்னும் இத்தலம் திருவானைக் காவல், கஜாரண்யம், ஜம்புகேஸ்வரம், ஜம்பு வீச்சுரம், வெண்நாவல் வனம், சம்புவனம், ஞானஷேத்திரம், ஞானத்தலம், ஞானபூமி, காவை, தந்திபுகாவாயில், அமுதகவரம், தந்திவனம், இபவனம் எனப் பெயர் பெற்றதாகும்.

அகிலாண்ட நாயகியான நம் அன்னை நீர்த் திரளை சிவலிங்கமாக்கி வழிபட்ட திருவானைக்கா ''யானைக்கு'' அருள் புரிந்தமையால், கஜாரண்யம், இபவனம், தந்திவனம் என்றும் வெண்நாவல் மரத்தின்கீழ் இறைவன் வீற்றிருப்பதால் சம்புவனம், ஜம்புகேகவரம், ஜம்புவீச்சரம் என்றும், அம்பிகை இறைவனிடம் ஞான உபதேசம் பெற்றதால் ஞானத்தலம் என்றும், யானை புகாதபடி கட்டப்பட்டதால், தந்தி புகா வாயில் என்றும், ஐம்பூதத் தலங்களுள் நீரினால் அமைந்ததால் அப்புத்தலம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

### கோவிலின் அமைப்பு:

இத்தலம் சோலைகளுக்கு நடுவில் அமைந்துள்ளது. சுவாமி சந்நிதி மேற்கு முகமாகவும், அம்மன் சந்நிதி கிழக்கு முகமாயும் அமைந்துள்ளன.

இந்தக் கோயிலைக் கட்டியதில் சிவபெருமானுக்கும் பங்கு உண்டு. ஆம்! திருவானைக்கா கோயிலின் ஐந்தாம் திருச்சுற்றாகிய விபூதிச்சுற்று மதில் சுவரை கட்டியவர் சிவபெருமான்தான்! சித்தர் வேடத்தில் வந்த சிவன், தொழிலாளர்களுக்குக் கூலியாக திருநீறு அளித்தாராம். அந்தத் திருநீறு தொழிலாளர்களின் பணிக்கேற்ப பொன்னாக மாறியதாம். தலத்துப் பெருமானை தரிசிப்பதற்காகவே அரங்கநாதர் திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பதாக கஜாரண்ய ஷேத்திர மகாத்மியம் கூறுகிறது.

கருவறை, ஒரு நாவல் மரத்தின் கீழ் அமைந்துள்ளது. அங்கே ஜம்புகேஸ்வரர் லிங்கத் திருவுருவில் காட்சியளிக்கிறார். அங்கே எப்போதும் நீர் சுரந்து கொண்டேயிருப்பது வெகு அதிசயம்.

சிவபெருமானின் சந்நதிக்கு நேரே ஒரு பலகணி இருக்கிறது. பக்கவாட்டில் திருவாயில் இருக்கிறது. அந்தப் பலகணியில் ஒன்பது கண்கள் (துவாரங்கள்) உண்டு. அந்தச் சாலரத்தை திருச்சாலகம் என்றும், ''சேவிக்கும் எல்லைத் திருச்சால் கதவமும்'' என்று திருவானைக்கா பாராட்டுகிறது. திருச்சாலகமாகிய சாலரத்தின் வழியாக தரிசிக்கும் பெருமானாதலின் சம்புநாதரை அருணகிரிநாதர் ''திருச்சாலகச்சோதி'', ''அருங்கூர் திருச்சாலச்சோதி தம்பிரானே'' என்று போற்றுகிறார்.

அடுத்ததாய் இறைவி அகிலாண்டேஸ்வரி அன்னை. தாமரை பீடத்தில் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் இரு கரங்களில் தாமரை மலர் ஏந்தி அபயவரதக் கரங்களுடன் காட்சியளிக்கிறார். திருமுடியில் பொன் மகுடம் தாங்கி, பட்டாடைகள் புனைந்து, பொன் அணிகலன்கள் அணிந்து, ருத்திராட்சம், மலர் மாலைகள் சூடியும், ஆதிசங்கரர் அணிவித்த தாடகங்களை காதுகளிலே அணிந்தும் அன்னை அகிலாண்டேஸ்வரி சர்வ அலங்கார பூஷிதையாக காட்சி தருவதை காணக் கண்கோடி வேண்டும்.

அம்பிகை தம் திருக்கரத்தால் பொன்னி நீரைத் திரட்டி எடுத்துச் சிவலிங்கமாக தான் வழிபட்டு ஆரம்பித்த வழிபாடு இன்றும் தொடர்கிறது. உச்சிகால வழிபாடு நடத்த வரும் கோயில் அர்ச்சகர் அகிலாண்ட நாயகி கோயிலிலிருந்து அந்த அம்மனைப் போல் பெண் உருவேற்று கிரீடம், உருத்திராட்சமாலை, பூவும் நீரும் கையிலேந்தி, கொட்டு மேளத்தின் ஓசையுடன், மூன்றாம் பிரகாரத்தை வலம் வந்து அண்ணலின் கோயிலுக்குச் சென்று தன்னை அம்பிகை போல் பாவித்து சிவ வழிபாடு செய்வது இங்கே விசேஷம்.

அகிலாண்ட நாயகி அவனியில் திருவானைக் காவைத் தேர்ந்தெடுத்து தவம் செய்கிறாள். பரமன் அவளெதிரில் காட்சி தருகிறார். பரமனை வணங்கி பின்னர் அகிலாண்ட நாயகி தன் மனதில் எழுந்த வேதாந்த சித்தாந்த ஐயப்பாடுகளுக்கு விளக்கம் கேட்கிறார். பரமனும் விளக்கங்களை தெளிவாக எடுத்துரைத்தார். ஞானம் முடிவற்றது. அது வளர்ந்து கொண்டேயிருக்கும். சிவபெருமான் குருநாதனாக இருந்து இறைவிக்கு உபதேசித்ததால், எல்லையில்லாத கல்வியை முழுவதும் கற்காததால் அகிலாண்ட நாயகி இன்னும் திருமணம் முடிக்காத மாணவியாகவே (கன்னியாக) காட்சி தருகிறாள். இக்கோயிலில் திருக் கல்யாணத் திருவிழா கிடையாது.

ஐந்துமுக விநாயகர், கையில் வீணையின்றி சுவடிகளுடன் நிற்கும் ஞான சரஸ்வதி, பிரசன்ன விநாயகர், ஏகபாத மூர்த்தி, இரு தேவியருடன் சந்திரன் என்று அபூர்வமான தரிசனங்களையும் இங்கே காணலாம்.

**நால்வர் பாடியது:**

நாம் இறைவனை நாள்தோறும் வஞ்சமின்றி வணங்க வேண்டும் என்றும், நாம் வீட்டின்பம் பெறுவதற்கு மனம் குளிர்ந்து மனம் உருகி ஆனைக்கா அண்ணலைப் பாடினால் நமக்கு அருள் செய்வார் என்றும் பாடியுள்ளார் நாவுக்கரசர்.


*''வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும்*
*வெஞ் சொலின்றி விலகுமின் வீடுற*
*நைஞ்சு நைஞ்சுநின்றுள் குளிர்வார்க் கெல்லாம்*
*அஞ்ச லென்றிடும் ஆனைக்கா அண்ணலே''*

- அப்பர்

சிவபெருமான் சித்தர் வேடத்தில் வந்ததை தமது திருத்தாண்டகத்தில் ''சித்தாய வேடத்தாய்'' என்று குறிப்பிட்டு மகிழ்கிறார்.

இளமையிலேயே இறையவனால் ஆட்கொள்ளப் பட்ட ஞானசம்பந்தர் ஆனைக்கா அண்ணலைப் பற்றி மூன்று பதிகங்கள் பாடியுள்ளார். வெண்ணாவலில் விலங்காகிய யானைக்கு அருள் செய்த ஆண்டவன் தனக்கு அருளமாட்டானா? என்றும், அடுத்த பதிகத்தில், நாம் வீட்டின்பம் பெறுவதற்கு மனம் குளிர்ந்து மனம் உருகி இறைவனைப் பாடினால் ஆனைக்கா அண்ணல் அஞ்சல் என்றும் நமக்கு அருள் செய்வார் என்றும் பாடியுள்ளார்.

ஆனைக்கா அண்ணலைப் பணிந்து தொழுது சுந்தரர் இறைவன் மேல் எழுந்த அன்பு மிகுதியால் இறைவனுக்கு தொண்டு செய்பவரே எமக்குத் தலைவராவார் என்ற கருத்தமைந்த ''எம்மையும் ஆளுடையார்'' என்ற தொடர் பாடல்தோறும் மகுடமாக வர ''மறைகள் ஆயின'' என்று தொடங்கித் திருப்பதிகம் பாடியுள்ளார்.



**சிற்பக் கலைகள்:**

சிற்ப நுணுக்கங்கள் அகிலாண்ட நாயகியின் திருவுருவுக்கு அடுத்தபடியாக மிகச் சிறப்புற அமைந்துள்ள இரண்டாம் திருச்சுற்றுத் தென்மேற்கு மூலையில் இருக்கும் வல்லபை கணபதியின் படிமமாகும்.

உற்சவ மூர்த்திகள் இருக்கும் மண்டபத்தின் கொடுங்கைகள் மரத்தால் செய்யப்பட்டதுபோல் தோன்றுமாறு ஆவுடையார் கோயில் பாணியில் அமைந்துள்ளது சிறப்பாகும். மூன்றாம் திருச்சுற்றில் கிழ்ப்புறம் உள்ள நாலுகால் மண்டபத்தில் நடமாடும் நங்கையார், குறி சொல்லும் குறத்தி போன்ற அழகான சிற்பங்களைத் தாங்கி உள்ளதைக் காணலாம். உற்சவ நடராஜர் சன்னதிக்கு கிழ்ப்புறம் உள்ள பழமையான தட்சிணாமூர்த்தி உருவம் அழகானது. மேலும் ஆயிரங்கால் மண்டபமும் சுந்தரபாண்டியன் கோபுரமும் வனப்புமிக்க படிவங்கள் பல நிறைந்தவை.

அகிலாண்ட நாயகி கோயிலின் கிழ்ப்புறம் நெல்லைச் சேமித்து வைக்கப் பல நூற்றாண்டுகளுக்கு முன் அமைந்துள்ள நெற்களஞ்சியம் அறிவியல் ரீதியில் சேமிக்கும் தானியம் கெட்டுப் போகாதபடி நம் முன்னோர்கள் பாதுகாத்து வந்த பாங்கை இன்றும் உணர்த்துகின்றது.

மேலும் தறகாலக் கருங்கல் சிற்பத் திறமைகளை காட்டவென்றே சுவாமி சன்னதியில் மூன்றாம் பிரகாரத்தில் உள்ள நான்கு பெரிய தூண்களும், அவற்றிலுள்ள கருங்கல் சிற்பங்களும் உச்சியில் தொங்கும் சங்கிலியும் அழகு செய்கின்றன.

புராணங்களும் வரலாறும், கல்வெட்டுகளும், இலக்கியங்களும், சிறப்பித்துக் கூறும், தென்னாட்டுத் திருக்கோயில்களில் மிக்க சிறப்புடையவற்றுள் ஒன்றான திருவானைக்கா திருக்கோயிலுக்கு வந்து அங்கு வீற்றிருக்கும் இறைவனையும் இறைவியையும் மனத்தால் நினைந்து வாயால் மனமுருகி பாடி வணங்குவோமானால் ஆனைக்கா அண்ணல் நமக்கு திருவருள் கூட்டுவிப்பார். அனைவரும் வந்து தரிசித்து எல்லாப் பேறுகளும் பெற்று மகிழ்வோமாக.

"தென்னாடுடைய சிவனே போற்றி.
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

★ ★ ★

# திருக்குடந்தை மகாமகம் 2004

- திருமதி இந்திரா ஆராவமுதன், திருவரங்கம்

நாம் இப்பொழுது அழைக்கும் கும்பகோணம் முன்பு குடமூக்கு என்று அழைக்கப்பட்டு வந்தது. இதை, முதல் ஆழ்வார்களில் இரண்டாமவரான பூதத் தாழ்வார் தம் இரண்டாம் திருவந்தாதி 97-ஆவது பாசுரத்தில் இவ்வாறு கூறுகிறார்.

**எங்கள் பெருமான் இமையோர் தலைமகன் நீ**
**செங்கணெடுமால் திருமார்பா - பொங்கு**
**படமூக்கினாயிர வாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய்**
**குட மூக்கில் கோயிலாக் கொண்டு**

*(2ந்திருவந்தாதி 97)*

மணலையும் அமிர்தத்தையும் குடமூக்கில் வைத்து லிங்கமாக வழிபட்டதால் குடமூக்கு என்றும், கோணமாக சுற்றி விழுந்ததாலும் குடமூக்கு என்றும் தொன்றுதொட்டு அழைத்து வந்தார்கள். பெயர் மாற்றம் 25.10.1385ல் ஆகியதாக சாரங்கபாணி கோயில் மண்டபம் தெற்கு சுவற்றில் கருப்பண்ண உடையார் கல்வெட்டின் மூலம் தெரிய வருகிறது. அன்று முதல் இதை கும்பகோணம் என்றே அழைக்கிறோம். அவ்வாறு முதல் முதலாக அழைத்தவர் அருணகிரி நாதர் ஆவார்.

**மற்ற தலங்களில் செய்தபாவம்**
**புண்ணிய நதி ஸ்னானத்தில் தொலையும்.**
**புண்ணிய நதிகளில் செய்த பாவம்**
**வாரணாசி சென்றால் தொலையும்.**
**வாரணாசியில் செய்த பாவம்**
**கும்பகோணத்தில் தொலையும்.**
**கும்பகோணத்தில் செய்த பாவம்**

**கும்பகோணத்திலேயே நசித்து விடும்** என்கிற வரிகளை நிரூபிப்பதுபோல தென்னிந்திய கும்ப மேளா என்று அழைக்கப்படும் மகாமக குளத்தைத் தன்னுள்ளே கொண்ட பெருமையுடையது கும்ப கோணம்.

நதி நீராடல், குளம் நீராடல், கடல் நீராடல் என்பார்கள். வடக்கே உள்ள பிரயாகையில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய நதிகளின் சங்கமத்தால் ஏற்படும் கும்பமேளா ஹரித்வாரம், உஜ்ஜயினி, நாசிக் போன்ற இடங்களிலும் ஆறுகள் கலக்கும் சங்கம மாகத்தான் கருதப்படுகிறது. மேற்கில் கோமதி துவாரகா, கிழக்கே பூரி, தெற்கே சேது, புல்லாணி ஆகியவை கடல் நீராட்டம் ஆகும்.

ஒரு சமயம் பிரளயத்தில் வேதங்கள் அழிந்து விடப்போகின்றதே என்று அஞ்சிய பிரமன் சிவ னிடம் வேண்டினார். சிவபெருமான் புண்ணிய தலங் களிலிருந்து அதிலும் விசேஷமாக திருச்சேறை என்ற தலத்தின் மண்மிகுந்த சாரம் உடையதாக இருந்ததால் அங்கேயிருந்தும் மண்ணை எடுத்து அமிர்தத்துடன் பிசைந்து அத்துடன் வேதங்கள், தர்ப்பை, தேங்காய், மாவிலை, பூணூல் முதலியவை களை வைத்து அடைத்து மேருமலையில் வைத்தார். பிரளயம் ஏற்பட்டு கும்பம் நகர்ந்து கும்பகோணம் வந்தவுடன் நின்றது. சிவன் வேடனாக வந்து அதன் மேல் அம்பைப் போட்டார். 5 இடங்களில் கும்பம் உடைந்து விழுந்தது. கும்பத்தில் இருந்த அமுதத்தை மகாமக குளத்திலும் பொற்றாமரைக் குளத்திலும் சிவனால் தேக்கப்பட்டு பெருமை பெற்றது. அப்படிப் பட்ட குள நீராட்டம்தான் 12 வருடங்களுக்கு ஒரு முறை வரும் மாசி மகத்திருவிழா.

நடந்து முடிந்த மகாமகத் திருவிழாக்களில் கிருஷ்ண தேவராயர், ரகுநாத நாய்க்கர்கள், மைசூர் மகாராஜாக்கள் வந்து நீராடி புண்ணியம் அடைந்தார் கள். அத்தகைய புனிதம் வாய்ந்த குளத்தில் 2004ம் வருடம் மார்ச் மாதம் 6-ந் தேதி சனிக்கிழமை அன்று நடந்த மாமாங்கத்தில் நாமும் நீராடும் பாக்கியம் பெற்றோம் அல்லவா என்கிற பெருமிதம் எழுகிறது.

மாமாங்கம் என்பது 12 வருடங்களுக்கு ஒரு முறை தான் வரும். சில சமயங்களில் 5, 6, 7, 8 மாமாங்கத்திற்கு ஒரு முறை 11 ஆண்டுகளிலும் வரும். அதை இள மாமாங்கம் என்பர். 1518லிருந்து கணக்கு எடுத்தால் நாம் தெரிந்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| *1518* | *1553* |
| *1529* (இளமாமாங்கம்) | *1565* |
| *1541* | *1577* |

| | |
|---|---|
| 1589 | 1802 |
| 1600 (இளமாமாங்கம்) | 1814 |
| 1612 | 1826 |
| 1624 | 1838 |
| 1636 | 1850 |
| 1648 | 1861 (இளமாமாங்கம்) |
| 1660 | 1873 |
| 1672 | 1885 |
| 1683 (இளமாமாங்கம்) | 1897 |
| 1695 | 1909 |
| 1707 | 1921 |
| 1719 | 1933 |
| 1731 | 1945 |
| 1743 | 1956 (இளமாமாங்கம்) |
| 1755 | 1968 |
| 1767 | 1980 |
| 1778 (இளமாமாங்கம்) | 1992 |
| 1790 | 2004 |

ஆக இதுவரை நடந்து முடிந்த 42 மாமாங்கங்களில் 6 இளமாமாங்கங்கள் வந்திருக்கின்றன. 25.2.1956-ல் வந்தது கடைசி இள மாமாங்கம் ஆகும். நடந்து முடிந்த 3-6-2004 அன்று நடந்த மாமாங்கத்தைப் போல 95 வருடங்களுக்கு முன்பு நடந்த மாமாங்கத்திலும் அதே கிழமை, மாசம், தேதி ஆகியவை வந்திருப்பது ஒரு ஒற்றுமை. சாதாரணமாக மனிதர்கள் ஆயுளில் 19 வருடங்களுக்கு ஒரு முறை வரும் பிறந்த நாள், முதல் பிறந்த நாளைப் போன்ற அதே தேதி, நட்சத்திரம், கிழமை ஆகியவற்றை ஒத்து இருக்கும் என்பார்கள். அதைப் போல 5 x 19 = 95 வருடங்கள் கழிந்தபின் மாமாங்கமும் அதே ஒற்றுமையுடன் வருவது மிகவும் விந்தையாக இருக்கிறதல்லவா?

இந்த மகாமககுளம் 20 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த குளத்தில் நடுநாயகமாக இருக்கும் தீர்த்தம் கன்யா தீர்த்தம் என்பது. இதில் 66 கோடி புண்ணிய தீர்த்தங்கள் அடங்கியுள்ளது. சுற்றி இருக்கும் 19 தீர்த்தங்களைப் பார்ப்போம்.

1. வாயு தீர்த்தம்
2. கங்கை தீர்த்தம்
3. யமுனை தீர்த்தம்
4. சரஸ்வதி தீர்த்தம்
5. பிரம்ம தீர்த்தம்
6. கோதாவரி தீர்த்தம்
7. இந்திர தீர்த்தம்
8. குபேர தீர்த்தம்
9. யம தீர்த்தம்
10. வருண தீர்த்தம்
11. குமரி தீர்த்தம்
12. நிருதி தீரத்தம்
13. பயோஷிணி தீர்த்தம்
14. நர்மதை தீர்த்தம்
15. சரயு தீர்த்தம்
16. தேவ தீர்த்தம்
17. காவேரி தீர்த்தம்
18. தாமிரபரணி தீர்த்தம்
19. அக்னி தீர்த்தம்

| | | | |
|---|---|---|---|
| ஆக பிரம்மதீர்த்தம் | - | 1 | மொத்தம் 19 தீர்த்தங்கள் |
| நவகன்னியர் தீர்த்தம் | - | 9 | |
| திக்பாலர் தீர்த்தம் | - | 8 | |
| தேவராதியர் தீர்த்தம் | - | 1 | |

20 தீர்த்தங்களை உள்ளடக்கிய இந்த மகாமகக் குளத்தை ஒரு முறை சுற்றி வந்தால் உலகைச் சுற்றி வந்த புண்ணியம் கிடைக்குமாம்.

செய்யப்படும் 18 தானங்கள் எவை எவை?

1. கோதானம்
2. ரிஷப தானம்
3. குதிரை தானம்
4. அன்ன தானம்
5. உப்பு தானம்
6. தென்னை மரதானம்
7. பூ தானம்
8. கன்னிகா தானம்
9. ஸ்வர்ண தானம்
10. யக்ஞோபவீத தானம்
11. தேன் தானம்
12. எள் தானம்
13. சந்தன தானம்
14. நவரத்தின தானம்
15. மாதுளம் தானம்
16. நல்முத்து தானம்
17. தானியம் தானம்
18. பாயசம் தானம்

பாக்கி தானங்களைச் செய்ய முடிகிறதோ இல்லையோ, அன்னதானத்தையும் பாயஸ தானத்தையும் செய்து எல்லாரையும் திருப்தி பண்ணிய புண்ணியத்தை சம்பாதிக்க முயலுவோம்!

மகாமக குளத்தில் புனித நீராட்டம் செய்யும் பக்தர்களுக்கு அருள் வழங்க 12 சிவ ஆலயங்களின் உத்ஸவ மூர்த்திகளும், 5 வைணவ ஆலயங்களின் மூர்த்திகளும் எழுந்தருளி தீர்த்தவாரி கண்டதை நாமும் கண்டுகளித்தோம்.



இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்களும், அறநிலையத்துறை உயர் அதிகாரிகளும் குடந்தை அருள்மிகு நாகேசுவரசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தந்து வழிபாடு செய்தார்கள்.

இந்திய துணைக் கண்டத்திலேயே சக்ரபாணிக்காக தனிக் கோயிலைக் கொண்டதும் கும்பகோணத்தில் தான் என்பதும் மற்றும் ஒரு சிறப்பு ஆகும்.

சாரங்கபாணி, சக்கரபாணி என்ற இரு அண்ணன் தம்பி கோயில்கள் இருப்பதும் குடந்தைக்கு ஏற்றம். சாரங்கபாணி சொற்படி அசுரனை அழிக்க பாதாள லோகம் சென்ற சக்கரம், அசுரனை அழித்துவிட்டு கும்பகோணத்தில் உள்ள காவிரியை பிளந்து வெளி வந்த இடத்தைச் சக்கர தீர்த்த கட்டம் என்பர். பிரம்மா தம் யாகத்தை முடித்து அவப்ரதஸ்னானம் செய்யும் சமயம் அவர் கையில் இந்தச் சக்கரம் கிடைத்தது. மகிழ்ந்த அவர் அமைத்த கோயில்தான் சக்ரபாணி ஆலயம். இவர் மூலஸ்தானம் 20 அடி உயரத்தில் அமைந்துள்ளது. ஷட்கோண யந்திரத்தில் 8 ஆயுதங் களுடன் இருக்கும் இவருக்குப் பக்கத்தில் சுதர்ஸன வல்லித் தாயார் இருக்கிறார். தனிக் கோயிலில் விஜயவல்லித் தாயாரும் இருக்கிறார். ருத்ர அம்சம் கொண்டு மூன்று கண்களை உடைய சுதர்ஸனத்தை வில்வதளத்தினாலும் அர்ச்சனை செய்வது வழக்கம். தக்ஷிணாயன, உத்தராயண வாசல்கள் உண்டு. சக்கரத் தாழ்வாரின் நக்ஷத்திரம் மாசி மகம் ஆகும்.

சூரியன் கர்வத்தை அடக்கியதால் பாஸ்கர க்ஷேத் திரம் ஆகும். சரபோஜி மன்னரும் ராணியும் அஞ்சலி செய்தபடி இருக்கும் சிற்பங்களைப் பார்க்கலாம்.

ஒரு அந்தணர் தமது தந்தையின் அஸ்தியை கங்கையில் கரைக்க வேண்டி கால்நடையாக வந்தவர் சக்கரப் படித்துறையில் சந்தியாவந்தனம் செய்ய வேண்டி கலசத்தை தம்முடன் வந்த பையனிடம் தந்து விட்டு அமர்ந்தார். கலசத்திற்குள் என்ன இருக்கிறது என்று பார்க்கும் ஆர்வத்தில் திறந்து பார்த்தான் பையன். செந்தாமரைப் புஷ்பங்கள் தென்பட்டதைப் பார்த்து மூடிவைத்து விட்டான். இருவரும் காசிக்குச் சென்று கலசத்தைத் திறந்து பார்க்கும்போது அதற்குள் எலும்புத் துண்டுகள் இருப்பதைக் கண்ட பையன் தான் கும்பகோணத்தில் கண்ட காட்சியை அந்தண ரிடம் சொன்னான். அவரும் கோபம் கொள்ளாமல் காசியை விட கும்பகோண க்ஷேத்ரம் மகிமை பெரிது என்று எண்ணித் திரும்பி வந்தார். கும்பகோணம் வந்து திறந்து பார்த்தால் அவைகள் தாமரை மலர்களாக காட்சி அளித்த அதிசயத்தை உணர்ந்தார். நீத்தார் கடன்களை சக்கர தீர்த்தத்தில் செய்தால் ச்ரேஷ்டம் என்ற உண்மை தெரிய வந்தது.

சக்ரபாணி நின்ற நிலையிலும், சாரங்கபாணி கிடந்த நிலையிலும், ராமசாமி அமர்ந்த நிலையிலும் கொண்ட 3 வைணவ நிலைகள் உள்ள பெருமான் களைக் கொண்ட நகரம் கும்பகோணமாகும்.

கைலாசத்தில் நடக்கும் ஈசனின் திருக்கல் யாணத்தை ஈசனின் கட்டளைப்படி தெற்கே வந்த அகத்திய முனிவர் பொதிகை மலையில் கண்டு ரசித் தாராம். அதேபோல தொலைக்காட்சிகள் மூலம் 2004ஆம் ஆண்டு நடந்த மகாமக நீராட்டத்தை மகிழ்ச்சி யுடன் கண்டுகளித்த நாம் அதை அசைபோட்ட படியே அடுத்த மாமாங்கத்திற்காக காத்திருக்க இறைவன் அருள்புரிவாராக!

★★★





மகாமக விழா 6-3-2004 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றபோது பல லட்சக்கணக்கான மக்கள் பக்திப் பரவசத்துடன் மகாமகக் குளத்தில் நீராடினர். மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனக்ய்யா பிஎஸ்.சி. பிஎல்., இணை ஆணையாளர் (திருப்பணி) திருமிகு ப. தனபால் எம்.ஏ. பிஎல். ஆகியோரும் அறநிலையத்துறை அதிகாரிகளும் இம்மகத்தான மகாமக விழா சிறக்க தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

# இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
# தமிழ்நாடு அரசு

## "திருக்கோயில்" ஆன்மிகத் திங்கள் இதழ் புதிய பொலிவுடன் வெளிவருகிறது

### உங்கள் தேவைக்கு இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மூலம் மாதந்தோறும் வெளிவரும் **"திருக்கோயில்"** ஆன்மிக இதழ் வண்ணப்படங்களுடன், கருத்துச் செறிவுள்ள கட்டுரைகள், நீதிக் கதைகள், தொடர் கட்டுரைகள், கேள்வி பதில்கள் மற்றும் எண்ணற்றச் செய்திகளுடன் அதிகப் பக்கங்களைக் கொண்டு புதிய பொலிவுடன் 2004ஆம் ஆண்டு மே திங்கள் முதல் ஒவ்வொரு மாதமும் போற்றிப் படித்து பாதுகாக்கும் பக்திக் கருவூலமாக உலாவரவுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| | | |
|---|---|---|
| திருக்கோயில் தனி இதழின் விலை | : | ரூ. 10/- |
| ஓராண்டுச் சந்தா | : | ரூ. 120/- |
| பத்து ஆண்டுகள் சந்தா | : | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | : | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

வங்கி வரைவோலை **"ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை - 34"** என்ற பதவிப் பெயரில், **"திருக்கோயில் திங்களிதழ் சந்தா"** எனக் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.

**தமிழறிஞர்கள் மற்றும் சமய ஆர்வலர்களிடமிருந்து "திருக்கோயில்" இதழுக்குக் கட்டுரைகள், கவிதைகள், நீதிக்கதைகள் வரவேற்கப்படுகின்றன.**

"திருக்கோயில்" இதழை விற்பனை செய்ய **முகவர்கள்** வரவேற்கப்படுகிறார்கள்.

ஆன்மிகம் தொடர்பான ஆதாரப்பூர்வ தகவல்கள் அளிக்கும் ஒரே இதழ்

**திருக்கோயில்**

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆணையர்
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.
தொலைபேசி : 28334811 / 12 / 13
தொலைநகலி : 28334816

ஆணையர்
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை - 34.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ. பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் சாலை, சென்னை - 600 014.